23.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீடிக்கிறது காற்றழுத்த தாழ்வு 2 நாட்களுக்கு மழை உண்டு

சென்னை:'வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, குமரி கடல் பகுதியில் நீடிப்பதால், தமிழகத்தில், இன்னும் இரண்டு நாட்களுக்கு கனமழை தொடரும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. சென்னை உட்பட, தமிழகத்தின் வட மாவட்டங்களில், இடைவிடாது கொட்டித் தீர்த்த கனமழையால், பல பகுதிகள் வெள்ளத்தில் தத்தளித்தன. சற்று மழை ஓய்ந்து மீட்பு பணிகள் தொடரும் நிலையில், தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால், தென் மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் தற்போது கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில், 'இன்னும், இரு நாட்களுக்கு, தமிழகத்தில் கனமழை தொடரும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:

தென்மேற்கு வங்கக்கடலில், இலங்கையை ஒட்டி உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, மேற்கு நோக்கி நகர்ந்து, குமரி கடல் பகுதியில், அதே காற்றழுத்த தாழ்வு நிலையாக நீடித்து வருகிறது. இதனால், கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள்மாவட்டங்களில் அனேக இடங்களிலும் நேற்று மழை பெய்துள்ளது.

நேற்று காலை, 8:30 மணியுடன் முடிவடைந்த, 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டம் இழுப்பூரில், 9 மற்றும் புதுச்சேரியில், 7 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. அடுத்த, இரு நாட்களுக்கு கடலோர மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் மழை பெய்யும். கடலோர மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் கன, மிக கன மழையும், உள் மாவட்டங்களில் கன மழையும் பெய்யும்.

சென்னையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; விட்டு விட்டு மழை பெய்யும்; சில இடங்களில் கன மழை பெய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

### மூணாறிலும் பலத்த மழை:மாட்டுப்பட்டியில் பாதிப்பு

மூணாறு:மாட்டுப்பட்டியில் நேற்று பெய்த பலத்த மழையினால் சுற்றுலா படகு சேவை பாதிக்கப்பட்டது.சுற்றுலா பகுதியான மூணாறில்,தற்போது குளிர் காலம் என்றபோதும், தமிழகத்தில் பெய்து வரும் மழையின் தாக்கம் உள்ளது. ஆகவே சில நாட்களாக மாலை மற்றும் இரவில் மழை பெய்து வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு தொடங்கிய மழை, நேற்று பகலிலும் நீடித்தது. மழை சற்று கூடுதலாக பெய்ததால், சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக சுற்றுலா பகுதிகளைக் காணச் சென்ற பயணிகள் மழையினால், வாகனங்களை விட்டு இறங்க இயலாத நிலை ஏற்பட்டது.சுற்றுலா படகு நிறுத்தம்: மூணாறு அருகே மாட்டுப்பட்டி அணையில் மாவட்ட சுற்றுலா வளர்ச்சி கழகம் மற்றும் மின் வாரியம் ஆகியோர் சார்பில் சுற்றுலா படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் நேற்று பெய்த பலத்த மழையினால், காலை அரைமணி நேரம் மட்டும் சுற்றுலா படகுகள் இயங்கின.அதன்பின்பு சுற்றுலா படகுகள் நிறுத்தப்பட்டதால், பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

### இன்னும் ஆறு மாதத்திற்கு பச்சை தேயிலை பறிக்க முடியாத நிலை

மூணாறு:கேரளாவில் இன்னும் ஆறு மாதங்களுக்கு பச்சை தேயிலை பறிக்க முடியாத நிலை காணப்படுவதால், அதன் பின்னரே புதுரக தேயிலை மார்க்கெட்டிற்கு வரும் நிலை காணப்படுகிறது.மூணாறில் தேயிலை தோட்ட தொழிலாளர்களை பங்குதாரர்களாக கொண்டு கே.டி.எச்.பி., கம்பெனி செயல்பட்டு வருகிறது. இங்கு 10 ஆயிரத்துக்கும் அதிகமாக தொழிலாளர்கள் நிரந்தரமாக வேலை செய்து வருகின்றனர். இவர்கள் 20 சதவிகிதம் போனஸ் கேட்டு கடந்த செப்.,6ம் தேதி முதல் தொடர்ச்சியாக எட்டு நாள் வேலை நிறுத்த போராட்டம் நடத்தினர். செப்., 28ம் தேதி முதல் அக்., 14ம் தேதி வரை மீண்டும் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தோட்டப்

பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. பச்சை தேயிலை பறிக்கப்படாததால், இலைகள் முற்றின. தவிர தேயிலை செடிகளை காட்டிலும் களைகள் உயர்ந்து வளர்ந்தது.

இந்நிலையில் போராட்டம் முடிந்து தொழிலாளர்கள் பணிக்கு திரும்பிய போதும், பச்சை தேயிலை முற்றியதால்,பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டது.

ஆகவே அவற்றை வெட்டி தேயிலை செடிகளை சீர்திருத்தும் பணிகள் நடந்து வருகின்றன. இப்பணிகள் ஒரு சில மாதங்கள் நீடிக்கும். இதனிடையே சில எஸ்டேட்டுகளில் தேயிலைச் செடிகளை விட வளர்ந்துள்ள களைகளை அகற்ற இயலாமல் நிர்வாகம் திண்டாடி வருகின்றன.

தற்போது பச்சை தேயிலை சீசன் என்ற போதும், தேயிலை செடிகளை சீர் திருத்தும் பணி நடப்பதால் பச்சை தேயிலை பறிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. தவிர வரும் நாட்கள் குளிர் காலம் என்பதால், இப்பகுதியில் ஏற்படும் பனிபொழிவு தேயிலை விவசாயத்திற்கு உகந்தது அல்ல. அதன்பின்பு கோடை காலம் தொடங்கி விடும்.அப்போது பச்சை தேயிலை சரிவர பறிக்க இயலாது. ஆகவே இன்னும் ஆறு மாதங்களுக்கு பச்சை தேயிலை பறிப்பது பாதிக்கப்படும். இதன் மூலம் தேயிலைத் தோட்ட தொழில் நலிவடைய வாய்ப்புகள் உள்ளன.

**காட்டுக்குள்ளே கொட்டுது மழை; அழகழகாய் ஓடிவருது வைகை**

வானம் பார்த்த பூமியாக கிடந்த நிலங்களை, பசுமையாக்கி, லட்சக்கணக்கான மனங்களை மகிழ வைக்கும் வைகையின் ஊற்றுக்கண், பிறப்பெடுத்த காட்டுக்குள்ளே திருவிழா (மழை) களைகட்டியுள்ளது. விட்டு விட்டு பெய்யும் சாரல் மழை, திடீரென அடித்து நொறுக்கும் அடைமழை, ஓடைகளில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம், சிற்றோடைகளின் கண் திறந்து ஊற்றெடுக்கும் தண்ணீர் என எல்லாம் ஓரணியாய் வைகையாகி நம்மை அடைகிறது.இயற்கையின் அருட்கொடையான மேற்கு தொடர்ச்சி மலையில், தேனி மாவட்டம் மேகமலை, வருஷநாடு மலைப் பகுதிகளில் நரம்புகளாய் சிற்றோடைகளாய் பின்னிப் பிணைந்துள்ள சிற்றாறுகளை உயிர்மூச்சாய்

கொண்டுள்ளது வைகை.கடும் வறட்சி காலத்திலும் அடர்வனப்பகுதியில் உள்ள காட்டு விலங்குகளுக்கு நன்னீர் சுரந்து கொடுக்கும் வெள்ளிமலையாறும், உடங்கலாறும் தான் வைகையின் உயிர்நாடி. காந்திகிராமத்திற்கும், அஞ்சரைப்பள்ளிக்கும் இடைப்பட்ட இடத்தில் இந்த இருஆறுகளும் ஒன்று சேர்ந்து 'கூட்டாறு' என்ற பெயரை சூடிக்கொள்கின்றன. மூலவைகையான இங்கிருந்து தான் வைகை தன் ஓட்டத்தை துவங்குகிறது.



கூட்டாற்றோடு சங்கமிக்க வெள்ளை பாய்ச்சலோடு பாலாறு.

## பசுமைக்கு பஞ்சமில்லை :

வைகையின் நீர்பிடிப்பு பகுதியான மேகமலை, மழை மறைவு பிரதேசமாக இருந்தாலும், அதன் மறுபகுதி கேரளாவின் பெரியாறு வனப்பகுதியாக இருப்பதால், இங்கும் அதன் மழைத் தாக்கம் உள்ளது. வடகிழக்கு பருவமழை நம்பிக்கை தருவதால், பகல் 12 மணிக்கே மேகமூட்டம், காட்டு மரங்களின் கிளைகளை தாலாட்டிச் செல்கிறது. புல் பூண்டுகளும், மரங்களின் கிளைகளும் பச்சைப்பசேலென கண்களை பரவசப்படுத்துகின்றன. மழை இன்றி காய்ந்து கிடந்த மலைமுகடுகளில் இருந்து இப்போது வெள்ளருவிகள் கண்களை குளிப்பாட்டுகின்றன.வெள்ளிமலை ஆற்றுடன் இணையும் பாலாறு, பாஸ்கர ஓடை, அம்மாகஜம், சந்தனக்காவு, லட்சுமிஓடை, 85 ஏக்கர் ஓடைகளிலும், உடங்கலாறுடன் இணையும் அரசரடி ஆறு, கன்னிமார்கடவு, கள்ளகாடு, புளிக்காடு, பொம்மராஜபுரம், இந்திராநகர் உள்ளிட்ட 180 ஓடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. சில நாட்களாக இப்பகுதியில் மழை

பெய்வதால் பல ஓடைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளன. இந்த ஆறுகளில் வரும் காட்டாற்று வெள்ளத்தின் வேகத்தினால், வைகை அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்கிறது.நம்பிக்கை தரும் துணை ஆறுகள் வறண்டு கிடந்த வைகையின் துணை ஆறுகளான சுருளியாறு, தேனியாறு, வரட்டாறு, வராகநதி, மஞ்சளாறு, நாகலாறு, மருதாநதி, சிறுமலையாறு, சாத்தையாறுகளிலும் தண்ணீர் ஓட்டம் உயர்ந்து வருகிறது. மேகமலை வனப்பகுதியில் இந்த ஆண்டு மழை நம்பிக்கை தரும் வகையில் இருந்தாலும், வருஷநாடு, கடமலை, மயிலை பகுதிகளுக்கு உட்பட்ட வைகையின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழையின் வேகம் குறைவு.பலநுாறு கி.மீ., சிற்றாறுகளும், ஓடைகளும் வனப்பகுதியில் ஓடினாலும், கூட்டாறு பகுதியில் இருந்து தான் பெரும்பாய்ச்சலுடன் வைகை ஓட்டமெடுக்கிறது. காந்திகிராமம், தும்பக்குண்டு, முருக்கோடை, வருஷநாடு, மயிலாடும்பாறை, கடமலைக்குண்டு, கண்டமனுார், குன்னுார் பகுதிகளை கடந்து வைகை அணையில் தண்ணீர் சேர்கிறது. வனப்பகுதியில் மழை பெய்தால் சில மணி நேரங்களிலே அணையை தண்ணீர் எட்டிவிடும்.மேகமலை, வருஷநாடு வனப்பகுதிகளில் புள்ளிமான், கடமான், யானை, காட்டுமாடு, சிறுத்தை, புலி என அனைத்து வகை உயிரினங்கள் உள்ளன. தற்போது சபரிமலை பயணம் துவங்கியுள்ளதால், யானைகள் அங்கிருந்து இடம்பெயர்ந்து இப்பகுதிக்கு வந்துள்ளன. வெள்ளிமலை ரோட்டில் பகலிலும் இவை உலா வருகின்றன. பெருமழை பெய்வதால், மான்களையும் ரோடுகளில் பார்க்க முடிகிறது. இங்கு விலங்குகளின் நடமாட்டம் அதிகம் உள்ளதால், பொதுமக்கள் யாரையும் வனத்துறை அனுமதிக்கவில்லை.

### வைகையின் 287 கி.மீ., பயணம்:

மதுரை உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களின் நீராதாரமான வைகை ஆற்று நீர் 374 கண்மாய்களில் தேக்கப்படுகிறது. மூலவைகை முதல் பேரணை வரை 66 கண்மாய்கள், பேரணை முதல் விரகனுார் வரை 86 கண்மாய்கள், விரகனுார் முதல் ராமநாதபுரம் வரை 214 கண்மாய்கள். இந்த கண்மாய்களில் வைகை அணையில் தேக்கும் தண்ணீரின் அளவை விட இரண்டு மடங்கு தேக்கலாம். பாசன பரப்பு 8714 சதுர கி.மீ., மூலவைகையில் இருந்து 287 கி.மீ., பயணித்து

ராமநாதபுரம் பெரிய கண்மாயில் சேர்கிறது. அங்கு நிறைந்தால் மறுகால் பாய்ந்து கடலில் சேரும்.

### நிறையும் வைகை அணை :

**தமிழன் (மேகமலை ஊராட்சி தலைவர்):** மஞ்சனூத்து செக்போஸ்ட் பகுதியில் இருந்து வெள்ளிமலை வரை அரசரடி, பொம்மராஜபுரம், இந்திராநகர், நொச்சிஓடை பகுதிகளில் 1,600 மக்கள் வசிக்கின்றனர். இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால் விவசாயத்தில் மக்கள் ஈடுபடவில்லை. மேகமலை, வருஷநாடு மலைப்பகுதிகளில் ஓடைகளில் தண்ணீர் வரத்து அதிகம் உள்ளது. இதே நிலை தொடர்ந்து நான்கு நாட்கள் நீடித்தால், வைகை அணை முழு உயரத்தை (71 அடி) எட்டும்.

### வறட்சியை சமாளிக்கலாம்:

**ராஜகோபால் (மேகமலை ஊராட்சி கவுன்சிலர்):** பருவமழை தொடர்ந்து 15 நாட்களாவது பெய்யும். சாரல் மழை தொடர்ந்தாலும் வைகையின் நீர்பிடிப்பு பகுதிகளில், ஊற்று பெருக்கெடுத்து ஓடும். ஊற்று நீரிலும் படிப்படியாக வைகை நிறைந்து விடும். அதனால் இந்த ஆண்டு கோடைக்கு தண்ணீர் தட்டுப்பாடு வர வாய்ப்பு இல்லை.

### பெரியாறு நீர்மட்டம் 136 அடியை எட்டியது

கூடலுார்:பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் பெய்த தொடர் மழையால், அணையின் நீர்மட்டம், 136 அடியை எட்டியது.

முல்லைப் பெரியாறு அணையில், 142 அடி தண்ணீர் தேக்கலாம் என, கடந்த ஆண்டு மே மாதம், 7ம் தேதி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியது. இந்த தீர்ப்பை அமல்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு நவ., 21ல் 142 அடி நீர் தேக்கப்பட்டது

இந்நிலையில், தற்போது, தொடர் மழை காரணமாக அணையின் நீர்மட்டம் உயர்ந்து, நேற்று மாலை, 136 அடியை எட்டியது. அணைக்கு நீர்வரத்து, 2,213 கன அடியாக இருந்தது. தமிழகப் பகுதிக்கு, 511 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பெரியாறு அணை நீர்மட்டம், 142 அடியாக உயரும் பட்சத்தில், ஷட்டர்களின் இயக்கங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக, தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகள் அணைப்பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

## மழை நீர் சேகரிப்பிற்கு மாதிரியான கானாடுகாத்தான்: வெள்ளத்துக்கு வடிகால் செட்டிநாடு

காரைக்குடி: செட்டிநாட்டின் கானாடுகாத்தானில் வடிகால் மூலம் ஓடும் மழைநீர் ஒரு கண்மாயிலிருந்து, மற்றொரு கண்மாய்க்கு செல்லும் வகையில் 200 ஆண்டுக்கு முன்பே வடிவமைத்துள்ளனர் நகரத்தார். சோழநாட்டின் பூம்புகார் நகரில் வணிகத்தில் சிறந்து வாழ்ந்து வந்த நகரத்தார்கள், அடிக்கடி கடல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர். அந்த நேரத்தில் அங்குள்ள மன்னருக்கும், மக்களுக்கும் இடையே ஏற்பட்ட பகைமை காரணமாக அவ்விடத்தை விட்டு அகன்று பாண்டியநாட்டிற்கு இடம் பெயர்ந்தனர். வாணிபத்தில் சிறந்து விளங்கிய நகரத்தாரை வரவேற்ற பாண்டிய மன்னர்கள்,



**கோயில், குளம் அமைப்பு:**

மக்களும் பாண்டிய மன்னனிடம் நீர்நிலைகளால் பாதிக்காதவாறு மேடான பகுதியை கேட்டனர். அவரும் செட்டிநாடு எனப்படும் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 96 ஊர்களை ஒதுக்கினார். தற்போது 74 ஊர்கள் நகரத்தார் ஊர்களாக கருதப்படுகிறது. வணிகத்தில் சிறந்து

விளங்கிய நகரத்தார்கள் கோயில், குளம் ஆகிய இரண்டையும் ஒரு சேர கட்டிய பின்னரே, குடியிருப்பு அமைத்தனர். ஒவ்வொரு வீடும் ஒரு ஏக்கர், அரை ஏக்கரில் அமைக்கப்பட்டது. ஊர்களின் அமைவிடங்கள் வறட்சியான நில அமைப்பில் அமைந்திருந்தாலும், வீடுகள் தமிழக மற்றும் மேற்கத்திய கலாசாரத்தை இணைந்து முற்றங்களுடன் கூடிய, பக்கவாட்டில் விரிவாக்கம் செய்யப்பட்ட அறைகள், திண்ணை ஆகியவற்றை கொண்டு அமைக்கப்பட்டது.

## ஈரக்கசிவு பாதிப்பு இல்லை:

வெப்பமான பகுதியில் இருந்ததால் வீடுகளின் குளிர்தன்மையை கருதி, கல், தள ஓடு அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. அடித்தளங்கள் செம்பராங்கற்கள் எனப்படும் கல்லால் கட்டப்பட்டதால், ஈரக்கசிவுகளாலும், மழையாலும் பாதிக்கப்படுவதில்லை. மழை குறைவு என்பதால், மழைநீரை சேமித்து வைக்கும் பழக்கத்தை அப்போதே நகரத்தார்கள் கொண்டிருந்தனர். மேற்கூரை ஓடுகளில் வழிந்தோடும் தண்ணீர், பக்கவாட்டில் அமைக்கப்பட்டுள்ள தகர கூம்பு வழி மூலம், முற்றத்தை வந்தடையும். இவ்வாறு வந்தடையும் தண்ணீரை கிடாரம், அண்டாக்களில் சேமித்து மாதக்கணக்கில் பயன்படுத்தினர். வீட்டின் இருபுறமும் மழைநீர் கால்வாய் அமைத்து, அந்த தண்ணீர் வரத்து கால்வாய் மூலம் ஊரணிக்கு சென்று அங்கிருந்து மறு ஊரணிக்கு செல்லும் வகையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

## தேங்காத மழை நீர்:

செட்டிநாட்டு ஊர்களாக கருதப்படும் 74 ஊர்களில், இன்றும் மழைநீர் வடிகால் அமைப்பில் சிறந்து விளங்கி, எவ்வளவு பெரிய மழை வந்தாலும் தண்ணீர் தேங்காதபடி இந்த கால்வாய்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. மக்கள் பெருக்கத்தாலும், நகரமயமாக்கலாலும், ஆக்கிரமிப்பாலும் பல ஊர்களில் இந்த கால்வாய், ஊரணிகள் அழிந்து வருகின்றன. ஆனாலும், கானாடுகாத்தானில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால், ஊரணிகள் அவ்வூரை வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாத்து வருகிறது. ஒவ்வொரு வீட்டிலும், மழைநீர் சேகரிப்பு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பொழியும் மழைநீர் அனைத்து

வீடுகளிலிருந்தும் மற்றும் இவ்வூரை சுற்றியுள்ள வடிகால்கள் மூலமாக கிழக்கிலிருந்து மேற்காக ஓடுகிறது. ஓடும் மழைநீர் இவ்வூரிலுள்ள 12 ஊரணிகளிலும், 6 கண்மாய்களில் சேகரிக்கப்படுகிறது. மேற்படி 12 ஊரணிகளில் நான்கு குடிநீர் ஊரணிகளாகவும், எட்டு குளியல் ஊரணிகளாகவும் பயன்பட்டு வருகிறது. குறிப்பாக எந்தவொரு ஊரணியோ அல்லது கண்மாயோ மழைநீர் நிரம்பியவுடன் உடையாமல் வடிகால் வழியாக அடுத்தடுத்த நீர் நிலைகளுக்குச் சென்று கானாடுகாத்தானிலுள்ள அனைத்து நீர்நிலைகளிலும் முழுநிறைவு பெற்றவுடன், பாதிப்பு ஏதும் ஏற்படாவண்ணம், கொத்தமங்கலம் கண்மாயை சென்றடைந்து இறுதியாக பம்பாற்றில் கலக்குமாறு 200 ஆண்டுக்கு முன்பே நகரத்தார் கட்டமைப்பை அமைத்துள்ளனர். கானாடுகாத்தான் பேரூராட்சி தலைவர் சிதம்பரம் கூறும்போது: சிவகங்கை மாவட்டம் கானாடுகாத்தான் பேரூராட்சி ஒரு புராதன நகரமாகும். வீடுகள் மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படா வண்ணம் இவ்வூரை வடிவமைத்து நகரத்தார் கட்டியுள்ளனர். பழங்கால வீடுகள் தரையிலிருந்து 5 அடி உயரமாகவே கட்டப்பட்டுள்ளது. மழைநீர் தெருக்களில் தேங்காமல் கால்வாய் வழியை ஊரணியை சென்று அடைந்து விடும். எனவே தான் உலகம் முழுவதிலும் இருந்து சுற்றுலா பயணிகள் ஆண்டுதோறும் வருகை தருகின்றனர். தற்போது மழை வெள்ளத்தால், தமிழகமே தத்தளிக்கும் வேளையில், கானாடுகாத்தான் வடிகால் அமைப்பை பார்த்து ஊர்களை நிர்மாணிக்கலாம். தமிழக அரசு மழைநீர் சேகரிப்பு முறையை அமல்படுத்தியது நகரத்தார் வீடுகளின் அமைப்பை பார்த்து தான், என்றார்.

## கனமழை: பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை

சென்னை: தொடர்மழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மாவட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு, இன்று (23ம் தேதி) விடுமுறை அளிக்கப்படுவதாக அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர். மேலும், விருதுநகர், திருவள்ளூர், பெரம்பலூர், அரியலூர், மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை வழங்கவும் அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் உத்தரவிட்டுள்ளனர். தூத்துக்குடி தாலுகாவிற்கு உட்பட்ட பள்ளிகளுக்கு மட்டும் நாளை விடுமுறை வழங்க

மாவட்ட கலெக்டர் ரவிக்குமார் உத்தரவிட்டுள்ளார். கனமழை காரணமாக புதுச்சேரி, காரைக்காலில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூர் வரத்து அதிகரிப்பால் வெண்டை விலை குறைவு

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் உள்ளூர் வரத்து அதிகரித்துள்ளதால் வெண்டைக்காய் விலை ஒரே வாரத்தில் கிலோ ரூ.45 லிருந்து குறைந்து ரூ.20க்கு விற்றது. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கடந்த ஒரு வார காலமாக தேனி மாவட்டத்தில் உள்ள பல ஊர்களில் இருந்து வெண்டைக்காய் வரத்து இருந்தது. உள்ளூர் பகுதியில் இருந்து வரத்து குறைவாகவே காணப்பட்டது. அப்போது தேவை அதிகமாக இருந்ததால் அதிக பட்சமாக கிலோ ரூ.45 வரை விற்றது.

தற்போது உள்ளூர் பகுதிகளில் விளைந்த வெண்டைக்காய் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் வெண்டைக்காய் விலை 4 நாட்களாக சரிவை சந்தித்தது. நேற்று இதன் விலை ரூ.20க்கு விற்றது. வரத்து அதிகரிக்கக்கூடும் என்பதால் விலை இன்னும் குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதியில் படகு மூலம் மின்சப்ளை சீரமைப்பு

தூத்துக்குடி:தூத்துக்குடியில் வெள்ளம் சூழ்ந்த பல பகுதிகளில் மின்கம்பங்கள் விழுந்து, மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

பல மணி நேரம் இருளில் தவித்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்வாரிய ஊழியர்கள் படகில் சென்று பழுதுநீக்கி மின்விநியோகத்தை சீரமைத்தனர்.தூத்துக்குடியில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, ஜே.எஸ்., நகர் முள்ளக்காடு, பொட்டல்காடு ஆகிய பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. கோரம்பள்ளத்தில் குளத்தில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் உப்பாற்று ஓடை கரையை உடைத்து பல கிராமங்கள், குடியிருப்புகளுக்குள் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

முள்ளக்காடு பகுதியில் கோயிலம்மாள்புரத்தில் மின் கம்பம் ஒன்று உடைந்து வெள்ளத்தில் விழுந்தது. இதனால் அத்திரமரப்பட்டி, பொன்னகரம்,

ஆதிபராசக்திநகர் ஆகிய பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு 8 மணி முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வெள்ளம் சூழ்ந்திருந்ததால், இதைச் சீரமைக்க முடிவில்லை. இதனால் 2ஆயிரம் வீடுகளில் மின்சாரம் இன்றி தவித்தனர்.

படகில் சென்று சீரமைப்பு: கலெக்டர் ரவிக்குமாரிடம் அப்பகுதி மக்கள் புகார் அளித்தனர். தாசில்தார் சந்திரன் மீனவர்களின் பைபர் படகு ஒன்றை மின் வாரியத்தினருக்கு ஏற்பாடு செய்து தந்தார். மின்வாரியத்தினர் படகு மூலம் சென்று பழுதை சீர்படுத்தி மின் இணைப்பு வழங்கினர்.

வெள்ளம் சூழ்ந்த நேரத்திலும் மின்சாரம் துண்டிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்கியதால், அப்பகுதி மக்கள் மின் வாரிய ஊழியர்களை பாராட்டினர்.

## தென்பெண்ணை ஆற்றில் வெள்ள எச்சரிக்கை

கடலூர் : திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சாத்தனூர் அணை நிரம்பியதால், உபரி நீர் தென்பெண்ணை ஆற்றில் திறக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. இதனையடுத்து பொதுப்பணித்துறையினர், தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தியுள்ளனர்.

## வீடுர் ஆற்றில் தண்ணீர் திறப்பு

விழுப்புரம்: வீடுர் அணையிலிருந்து சங்கராபரணி ஆற்றில் 2,400 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. வீடுர் அணைக்கு 2,500 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இதனால் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியை தாண்டியது

தேக்கடி : முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் இரண்டாவது முறையாக 136 அடியை தாண்டியது. கடந்த 2014, நவ.,1ம்தேதி முதன்முறையாக நீர்மட்டம் 136 அடியை தாண்டியிருந்தது. அணைக்கு நீர்வரத்து 2,554 அடியாகவும், நீர்திறப்பு 511 கனஅடியாகவும் உள்ளது.



சிறுபாக்கத்தில் மழைக்கு சேதமடைந்த மரவள்ளி, பூக்கள் சாகுபடி செய்துள்ள வயல்களை மண்டல அலுவலர் மணிமொழி பார்வையிட்டார்.

**அணைகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி! வேளாண் பயிர் சாகுபடியில் அதிக ஆர்வம்**

கள்ளக்குறிச்சி: விழுப்புரம் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்மழையால் அணைகள் மற்றும் ஏரிகள் நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் வட கிழக்கு பருவ மழை தீவிரமாக பெய்து வருகிறது. கள்ளக்குறிச்சி பகுதியில் கோமுகி, மணிமுக்தா ஆகிய இரு அணைகள் மூலம் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. அதேபோல் வீடூர் அணை மூலம் 3,200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. மழைக் காலங்களில் அணைகள் நிரம்பி, ஷெட்டர்கள் மூலம் ஆற்று வழியாக வெளியேற்றப்படும் நீர், ஆற்றில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் மூலம் ஏரிகளுக்கு திருப்பி விட்டு, அவை விவசாயத்திற்கு யன்படுத்தப்படுகின்றன. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கிணற்று நீர் பாசனம் மூலம் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையில் நீர்நிலைகளுக்கு வரத்து அதிகரித்து அணைகள், ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் நிரம்பி வருகின்றன. தற்போது பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அணைகளிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

கோமுகி அணை: கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணைக்கு கல்படை, பொட்டியம், மல்லிகைப்பாடி ஆறுகளின் வழியாக நீர் அணைக்கு வருகிறது. மொத்த கொள்ளளவான 46 அடியில் (561 மில்லியன் கன அடி), தற்போது 44 அடி (489 மில்லியன் கன அடி ) மட்டுமே இருப்பு வைக்க முடியும். இதனால் உபரி நீர் தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது.

கள்ளக்குறிச்சி பகுதியில் நேற்று 20 மி.மி., மழை பதிவாகியது. இதனால் அணைக்கு நீர் வரத்து மேலும் அதிகரிக்கும் என்பதால், பாதுகாப்பு கருதி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அணையின் நீர்மட்டத்தை 43 அடியாக குறைக்க, காலை 10:00 மணி முதல் நீர் வெளியேற் றும் அளவை படிப்படியாக உயர்த்தி வருகின்றனர். மேலும் புதிய ஷெட்டர்கள் மூலம் 2,500 கன அடி வரை நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் ஆற்றிலுள்ள 11 தடுப்பணைகளும் நிரம்பி, வெளியேறும் நீர் ஏரிகளுக்கும் செல்கிறது.

மணிமுக்தா அணை: சூளாங்குறிச்சியில் அமைந்துள்ள மணிமுக்தா அணைக்கு, கல்வராயன்மலையில் உருவாகும் மணி, முக்தா ஆகிய நதிகள், பாப்பாங்கால் ஓடை ஆகியவை மூலம் அணைக்கு நீர் வருகிறது. மொத்த கொள்ளளவான 36 அடியில் (736 மில்லியன் கன அடி) நேற்று முன் தினம் வரை 34 அடி (580 மில்லியன் கன அடி) வரை நீர் மட்டம் இருந்தது. நேற்று பலத்த மழை பெய்ததால் நீர் வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம் மேலும் உயர்ந்தன. இதனால் ஷெட்டர்கள் மூலம் வரத்து நீர் வெளியேற்றப்பட்டன.

பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பெரியசாமி, உதவி பொறியாளர் கணேசன் ஆகியோர் கண்காணிப்பில் ஈடுபட்டு காலை 6:00 மணி முதல் படிப்படியாக 2,220 கன அடி நீர் ஆற்று வழியாக வெளியேற்றி வருகின்றனர்.

கடந்த 2010ம் ஆண்டு தானே புயலின் போது அணையிலிருந்து ஆறு வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டன. அதன் பிறகு தற்போது முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் ஆற்றிலுள்ள 6 தடுப்பணைகள் நிரம்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

**வீடூர் அணை**

இதேபோல் வீடூர் அணையின் முழு கொள்ள ளவான 32 அடிக்கு, தற்போது 30 அடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இனிமேல் வரும் வரத்து நீரை வெளியேற்றும் வகையில் பொது பணித்துறையினர் அறிவிக்கவுள்ளனர். மாவட்டத்திலுள்ள ஏரிகளில் 50 சதவீதத்திற்கு மேல் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. மற்ற ஏரிகளும் ஓரிரு நாட்களில் முழு அளவை எட்டும் நிலை உள்ளது.கடந்த சில ஆண்டுகளுக்கு பிறகு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பெரியாறு நீர்மட்டம் 136 அடியை எட்டியது**

கூடலூர்:பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் பெய்த தொடர் மழையால், அணையின் நீர்மட்டம், 136 அடியை எட்டியது.

முல்லைப் பெரியாறு அணையில், 142 அடி தண்ணீர் தேக்கலாம் என, கடந்த ஆண்டு மே மாதம், 7ம் தேதி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியது. இந்த தீர்ப்பை அமல்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு நவ., 21ல் 142 அடி நீர் தேக்கப்பட்டது

இந்நிலையில், தற்போது, தொடர் மழை காரணமாக அணையின் நீர்மட்டம் உயர்ந்து, நேற்று மாலை, 136 அடியை எட்டியது. அணைக்கு நீர்வரத்து, 2,213 கன அடியாக இருந்தது. தமிழகப் பகுதிக்கு, 511 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பெரியாறு அணை நீர்மட்டம், 142 அடியாக உயரும் பட்சத்தில், ஷட்டர்களின் இயக்கங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக, தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகள் அணைப் பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

**கோழிகளுக்கு வேகமாக பரவும் அம்மை நோய்; மழையால் கால்நடை வளர்ப்போர் அச்சம்**

கரூர் : கரூர் மாவட்டம் முழுவதும் பருவ மழை காரணமாக கோழிகளுக்கு அம்மை நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் செய்வதறியாது கால்நடை வளர்ப்போர் அச்சத்துடன் உள்ளனர். கரூர் மாவட்டத்தில், கால்நடை வளர்ப்போர், தங்கள் வீடுகளின் பின்புறமும், கொட்டகை அமைத்தும் லட்சக்கணக்கான கோழிகள் வளர்த்து வருகின்றனர். தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதாலும், கடந்த மாதம் முதல் தொடர்ந்து அவ்வப்போது மழை பெய்ததாலும், மக்கள் மட்டுமின்றி, கால்நடைகளும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

அறிவுரை வழங்கல்

மழை காலங்களில் கால்நடைகள் பாதிக்காவண்ணம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, கரூர் மாவட்ட கால்நடை ஆராய்ச்சி பயிற்சி மையம், சில அறிவுரைகளை அளித்து வருகிறது. இருப்பினும், தற்போது மாவட்டம் முழுவதும் வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகள், சண்டைக் கோழிகள், வான்கோழி, பிராய்லர் கோழிகளுக்கு அம்மை நோய் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

டாக்டர்கள் அலட்சியம்

இதுகுறித்து, கடவூர் பகுதியில் கோழி வளர்க்கும் விவசாயி பெரியசாமி தெரிவித்ததாவது:அம்மை நோய் பாதிப்புக்கு கால்நடை மருத்துவத்துறையினர் தான் சிகிச்சை அளிக்க வேண்டும். ஆனால், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான கால்நடை மருத்துவமனைகளில் கோழி, ஆடுகளுக்கு சிகிச்சை அளிப்பதில்லை. கால்நடைகள் என்றாலே டாக்டர்கள் அலட்சியம் காட்டுகின்றனர். இதனால் கோழி வளர்ப்பவர்கள் மட்டுமின்றி சுற்றுப்புறத்தில்

கால்நடை வளர்ப்பவர்களும் நோய் பரவல் காரணமாக பாதிக்கின்றனர்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து கரூர் மாவட்டம் தண்டுகாரண்புதுார் கால்நடை ஆராய்ச்சி பயிற்சி மைய இயக்குனர் அகிலா கூறியதாவது:பருவமழை மாற்றத்தால் அவ்வப்போது, கோழிகளுக்கும் அம்மை நோய் வரும். அதற்கு அறிகுறியாக கோழியின் மூக்கு, கண் போன்ற பகுதியில் சின்ன கொப்பளம் ஏற்படும். இதை வைத்தே அம்மை நோய் வந்துள்ளது என்பதை கண்டறியலாம்.

அம்மை வர வாய்ப்பு

குறிப்பாக, ஒரு மாத கோழி குஞ்சுகளுக்குத்தான் முதலில் அம்மை நோய் வரும். இதைக் கண்டறிந்து முதலில் அந்தக்கோழியை தனிமைப்படுத்த வேண்டும். கூட்டமாக விட்டால் இந்தக் கோழிகளுக்கு வந்த கொப்பளங்கள் வெடித்து அதிலிருந்து பரவும் வைரஸ் மற்ற கோழிகளுக்கும் பரவி அம்மை நோய் வரும்.

இதற்கு கிராமப்புறங்கள் மட்டுமின்றி அனைவருமே முதலில் வேப்பிலை, மஞ்சள் அரைத்து கோழிகளுக்கு ஏற்பட்ட கொப்பளத்தில் தடவி விடுவர். சில நாட்களில் சரியாகி, அந்த கொப்பளங்கள் தானாக உதிர்ந்து விடும்.

தடுப்பூசி கட்டாயம்

அப்படி சரியாகவில்லை என்றால், உடனடியாக கால்நடை மருத்துவமனைக்கு கோழிகளைக் கொண்டு சென்று அம்மை நோய் தடுப்பூசி போட்டு பாதுகாக்கலாம்.இதன் மூலம் மட்டுமே கோழிகளைக் காப்பாற்ற முடியும். இதை சாதாரணமாக நான்கு, ஐந்து கோழி வளர்க்கும் பொதுமக்களும், அதிகளவில் கோழி வளர்ப்பவர்களும் கடை பிடிக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## வெள்ளத்தில் மூழ்கிய வயல்கள்: கலெக்டர் ஆய்வு

கள்ளிக்குடி: கள்ளிக்குடி பகுதியில் நேற்று முன் தினம் இரவு பெய்த கனமழையைஅடுத்து, 100 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டிருந்த வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின.எழுமலை, பேரையூர், டி.குன்னத்துாரிலும் நேற்று முன் தினம் இரவு கனமழை பெய்தது. குன்னத்துார் வழியாக உத்தம்பட்டி, ஆதனுார் கால்வாய் வழியாக வில்லுார் உவரி கண்மாய்க்கு வெள்ளம் வந்தது.

கால்வாய்கள் தூர்வாரப்படாததால், பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் வயல்களில் புகுந்தது. இதில் பயிரிடப்பட்டிருந்த பருத்தி, சோளம் பயிர்கள் நாசமாயின. வில்லூரை சுற்றி 100 ஏக்கர் நிலங்களில் பெரும்பாலும், நெல் பயிரிடப்பட்டிருந்தது. இவையும் நீரில் மூழ்கின. கலெக்டர் சுப்ரமணியன், முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., ஆர்.டி.ஓ., பாலசுப்ரமணியன், பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் லீலாவதி ஆகியோர் கள்ளிக்குடி செங்குளம் கண்மாய் மறுகால் செல்வதை பார்வையிட்டனர். வெள்ளாகுளம், சோளம்பட்டி உட்பட அடுத்தடுத்த கண்மாய்களுக்கு வெள்ளத்தை கடத்த கலெக்டர் உத்தரவிட்டார். கலெக்டரிடம் விவசாயிகள், 'ஆறாண்டுகளுக்கு பிறகு வெள்ளம் வருகிறது. நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி நாசமாகின. அரசு நிவாரணத் தொகை வழங்க வேண்டும்,' என்றனர். "வி.ஏ.ஓ.,க்கள் மூலம் பயிர் சேதம் கணக்கெடுக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படும்," என கலெக்டர் தெரிவித்தார். வேளாண் உதவி இயக்குனர் தனலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அலமேலு, கார்த்திகேயன் ஆகியோர் உடன் சென்றனர்.

### உச்சத்தில் காய்கறி விலை உயர பறக்குது! மழையால் வரத்து குறைவு



கோவை : கோவையில் பெய்து வளரும் மழையால், காய்கறிகளின் வரத்து குறைந்து, விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

கோவைக்கு, உள்ளூர் மற்றும் கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து தினமும், லாரிகளில், காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. கோவை எம்.ஜி.ஆர்., அண்ணா, தியாகி குமரன் மார்க்கெட் ஆகிய மொத்த வியாபார மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

நாள் ஒன்றுக்கு கோவைக்கு தலா, 200 முதல், 250 டன் வரையிலான காய்கறிகள் தேவைப்படுகின்றன. அண்டை மாநிலமான கேரளாவுக்கு, தக்காளி வெங்காயம், ேகரட், கத்தரி, வெண்டை உள்ளிட்ட அனைத்து காய்கறிகளும், லாரிகளில் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்நிலையில், வடகிழக்கு பருவமழை கடந்த சில நாட்களாக அதிகளவு பெய்து வருகிறது. மழையால் உற்பத்தி பாதிப்பு, வரத்து குறைவு, சபரிமலை சீசன் காரணமாக தேவை அதிகரிப்பு

உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், காய்கறி விலை எகிறி வருகிறது.

தக்காளி, சின்ன வெங்காயம், கத்திரிக்காய், உருளைக்கிழங்கு, காரட் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால், ஏழை மற்றும் நடுத்தர மக்கள், குடும்ப பட்ஜெட்டில், பெருமளவு 'துண்டு' விழுகிறது.கோவை மாவட்ட மொத்த அனைத்து காய்கறி வியாபாரிகள் சங்க செயலாளர் அப்துல் அஜீஸ் கூறியதாவது:கோவையின் தேவை போக கேரளாவுக்கு அதிகளவு தக்காளி கொண்டு செல்லப்படுகிறது. ஆண்டுதோறும் ஆக., மற்றும் செப்., மாதங்களில் பெரிய வெங்காயம் விளைச்சல் குறையும்.

இக்குறிப்பிட்ட மாதங்களில் கர்நாடகா மாநிலத்தில் இருந்தும் வரத்து குறைவாக இருக்கும். இவ்வாண்டும் அதே நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் விளைச்சல்

குறைந்துள்ளது. இதனால் உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து வரும் காய்கறிகளின் வரத்தும் குறைந்துள்ளது.

நாள் ஒன்றுக்கு 20 முதல் 25 லாரிகளில், காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படும். தற்போது, ஐந்து முதல் ஏழு லாரிகளே வருகின்றன; தேவை பலமடங்கு அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன், 30 ரூபாயாக இருந்த பெரிய வெங்காயம் தற்போது, 50 ரூபாய் வரை விற்பனையாகிறது.இதேபோல், கடந்த வாரங்களில் 25 ரூபாயாக இருந்த தக்காளி, 80 ரூபாய் என்றளவில் உள்ளது. மழை நீடிக்கும் பட்சத்தில் காய்கறிகளின் விலை மேலும் உயரக்கூடும்.இவ்வாறு, அவர் கூறினார்.

நேற்றைய விலை நிலவரம் (கிலோ - ரூபாயில்):

பெரிய வெங்காயம் - 50, சின்ன வெங்காயம் - 80, பீன்ஸ் - 55, பீட்ரூட் - 35, முட்டைக் கோஸ் - 20, நாட்டுத் தக்காளி - 80, வெண்டைக்காய் - 50, கத்தரிக்காய் - 50, அவரைக்காய் - 48, உருளைக்கிழங்கு - 40, காரட் - 45.

**வீடூர் அணை வேகமாக நிரம்புவதால் புதுச்சேரியில் கிராம மக்களுக்கு எச்சரிக்கை**

புதுச்சேரி: வீடூர் அணை வேகமாக நிரம்பி வருவதால் சங்கராபரணி ஆற்றங்கரையோரம் உள்ள புதுச்சேரி கிராமங்களுக்கு எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

மயிலம் அருகிலுள்ள வீடூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து மூன்று ஆண்டுகளுக்கு பிறகு நீர் மட்டம் 30 அடியை எட்டியது. அணையின் மொத்த கொள்ளவு 32 அடி, நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 30 அடியாக உள்ளது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்தால், ஓரிரு நாளில் அணை திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் மயிலம், புதுச்சேரி மாநிலத்திற்கு உட்பட்ட திருக்கனுார் பகுதிகளில் பொதுப் பணித் துறை அதிகாரிகள், போலீசார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி கலெக்டர் மணிகண்டன் கூறியதாவது:

புதுச்சேரியில் மழை பாதிப்பை தடுக்க உள்ளாட்சி, பொதுப் பணி, சுகாதாரம், உள்ளிட்ட அனைத்து துறைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

இடிந்து விழுந்த வீடுகள் கணக்கெடுப்பு நடக்கிறது. வீடுர் அணையின் மொத்த கொள்ளவு 32 அடியாகும். தற்போது நீர் மட்டம் 30 அடியாக உள்ளது. அணைக்கு தற்போது 426 மில்லியன் கன அடி நீர் வருகிறது. மொத்த நீர் அளவு 605 மில்லியன் கன அடியாகும். கன மழை பெய்வதால் புதுச்சேரி சங்கரப்பரணியாறு கரையோர கிராமங்களுக்கு எச்சரிக்கை விடப்படுகிறது. ஆற்றில் இறங்க வேண்டாம் என, அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. வீடூர் அணை திறப்பது குறித்து புதுச்சேரி அதிகாரிகள், தமிழக அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

## கரையாம்புத்தூர் பள்ளியில் மரக்கன்றுகள் தத்தெடுப்பு

புதுச்சேரி: கரையாம்புத்துார் அரசு மேல்நிலைப்பள்ளியில், மரக்கன்றுகள் தத்தெடுக்கும் விழா நடந்தது.

புதுச்சேரி அரசு என்.எஸ்.எஸ்., பொதுப் பிரிவு, கரையாம்புத்துார் அரசு மேல்நிலைப் பள்ளி என்.எஸ்.எஸ்., சார்பில், கரையாம்புத்துார் பள்ளியில், தன்னார்வலர்கள் மரக்கன்றுகளை தத்தெடுக்கும் விழா நடந்தது.

என்.எஸ்.எஸ்., பொதுப்பிரிவு சிறப்பு ஆலோசகர் வெற்றிவேல் தலைமை தாங்கினார். பள்ளியின் என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர் தனசு வரவேற்றார். ஆலோசனைக் குழு தலைவர் அய்யனார், செயலர் முத்து அய்யாசாமி முன்னிலை வகித்தனர். மரக்கன்றுகளை தத்தெடுப்பதன் அவசியம் குறித்து பொதுப்பிரிவு திட்ட அலுவலர் பச்சையப்பன் நோக்கவுரையாற்றினார்.

பாகூர் தாசில்தார் பிரபாகரன், கரையாம்புத்துார் அரசு மேல்நிலைப்பள்ளி துணை முதல்வர் ஆறுமுகம், என்.எஸ்.எஸ்., திட்ட கல்லுாரி ஒருங்கிணைப்பாளர் தேவபாலன் வாழ்த்தி பேசினர்.

பெரியசாமி எம்.எல்.ஏ., சிறப்பு விருந்தினராக பங்கேற்று, மரக்கன்றுகளை தன்னார்வலர்களுக்கு தத்து கொடுத்து, பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை

நட்டார். மாணவ மாணவியருக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. சுற்றுச்சூழல் குழுத்தலைவர் ஜானகிராமன் நன்றி கூறினார்.

### டூ 11 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின:இரு நாட்களில் முளைவிடும் அபாயம்

வாலாஜாபாத்:கனமழையால், அறுவடை பருவத்தை அடைந்துள்ள, 11 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. ஓரிரு நாட்களில் அறுவடை செய்யவில்லை என்றால், அனைத்து நெல்லும் முளைத்து, பெரும் நஷ்டத்தை விவசாயிகள் சந்திக்க வேண்டிவரும்.

மாவட்ட வேளாண் பொறியியல் துறையிடம், நீர் தேங்கிய வயலில், அறுவடை செய்யும் திறன் கொண்ட பெல்ட் அறுவடை இயந்திரம் ஒன்றுதான் உள்ளது. அந்த இயந்திரமும் பிற மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டதால், விவசாயிகள் செய்வதறியாது உள்ளனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஆகஸ்ட் மாதத்தில் நடவு செய்து, நவம்பரில் அறுவடை செய்யும் சம்பா பருவத்தில், மாவட்டம் முழுவதும், 30 ஆயிரம் ஏக்கரில், கோ. 51; என்.எல்.ஆர்.; ஆடுதுறை 45; பாபட்லா ஆகிய நெல் ரகங்கள் பயிரிடப்பட்டு உள்ளன.

அதில், அறுவடை பருவத்தை அடைந்துள்ள நெற்பயிர்களில், 11 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள், தற்போதைய கனமழையால், நீரில் மூழ்கியுள்ளன. மூழ்கிய நெற்பயிரை அறுவடை செய்ய, கூலி ஆட்கள் கிடைப்பதில்லை என, கூறப்படுகிறது.

சாதாரண டயர் அறுவடை இயந்திரம் சேற்றில் சிக்கிவிடும் என்பதால், நீரில் மிதக்கும் பெல்ட் அறுவடை இயந்திரத்தின் மூலம், அறுவடை செய்ய, விவசாயிகள் திட்டமிட்டு உள்ளனர்.

மாவட்ட வேளாண் பொறியியல் துறையிடம், சென்னை நந்தனம் அலுவலகத்தில், ஒரு பெல்ட் அறுவடை இயந்திரமும்; மதுராந்தகத்தில் ஒரு டயர் அறுவடை இயந்திரமும் என, இரு அறுவடை இயந்திரங்களே உள்ளன.

கூடுதலாக ரூ.500:இதனால், பெல்ட் இயந்திரத்தை வாடகைக்கு எடுக்க, பாதிப்புக்குள்ளான அனைத்து விவசாயிகளும், வேளாண் பொறியியல் அலுவலகத்திற்கு படையெடுத்து வருகின்றனர். அலுவலகத்திற்கு சென்ற விவசாயிகளிடம், 'பெல்ட் அறுவடை இயந்திரம், தற்போது நம் மாவட்டத்தில் இல்லை; மாயவரம் பகுதிக்கு அறுவடைக்காக கொடுத்துள்ளோம். டயர் இயந்திரம் மட்டுமே மதுராந்தகம் அலுவலகத்தில் உள்ளது' என, அதிகாரிகள் அலட்சியமாக பதிலளிப்பதாக கூறப்படுகிறது.நீரில் மூழ்கிய நெற்பயிர்கள், தற்போது முளைவிட்டு வளர்ந்து வருகின்றன. ஓரிரு நாட்களில் அவற்றை, அறுவடை செய்யவில்லை என்றால், பெரும் பொருளிழப்பை விவசாயிகள் சந்திக்க நேரிடும். இதனால், பெல்ட் இயந்திரங்களை தனியாரிடம் வாடகைக்கு எடுக்க விவசாயிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

விவசாயிகளின் நெருக்கடியான இந்த சூழலை, தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள நினைத்த பெல்ட் இயந்திர உரிமையாளர்கள், இயந்திரத்தின் வாடகையை ஒரு மணி நேரத்திற்கு ௫00 ரூபாய் வரை உயர்த்தி உள்ளனர். இதனால், என்ன செய்வதென்று அறியாமல், பாதிக்கப்பட்ட விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

இதுகுறித்து, வேளாண் துறை இணை இயக்குனர் வி.சீதாராமன் கூறியதாவது:

காஞ்சிபுரம் மாவட்டத்தில், படப்பை, ஸ்ரீபெரும்புதுார், வாலாஜாபாத், உத்திரமேரூர் ஆகிய பகுதிகளில், அறுவடை பருவத்தில் இருக்கும், 11 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள், நீரில் மூழ்கி உள்ளன.

ஒரு சில பகுதிகளில், மூழ்கிய நெற்பயிர்கள் முளைவிட்டுள்ளன. அந்த வயல்களின் வரப்புகளை வெட்டி, தண்ணீரை வெளியேற்ற விவசாயிகளை அறிவுறுத்தி உள்ளோம்.

தேங்கிய நீரை வெளியேற்றி, அறுவடை செய்தால் தான், விவசாயிகள் நஷ்டத்திலிருந்து தப்ப முடியும்.இவ்வாறு அவர் கூறினார்.

அங்கு முடிந்ததும்...வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் கே.ரங்கநாதன் கூறுகையில், 'நம் மாவட்டத்தில் இருந்த, ஒரு பெல்ட் இயந்திரத்தை, மாயவரம் பகுதியில் அறுவடைக்கு அனுப்பி உள்ளோம். அங்கு அறுவடை முடிந்தபின், இங்கு வந்து விடும். அதன்பின் அதை நம் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்' என்றார்.

## 10 ஆண்டுகளுக்கு பின் நிரம்பிய வல்லூர் அணைக்கட்டு

மீஞ்சூர்:கொற்றலை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், 10 ஆண்டுகளுக்கு பின், வல்லூர் அணைக் கட்டு நிரம்பி உபரி நீர் கடலுக்கு சென்று கொண்டிருக்கிறது.மீஞ்சூர் அடுத்த, சீமாவரம் பகுதியில், கொற்றலை ஆற்றின் குறுக்கே உள்ள வல்லூர் அணைக்கட்டு, 1869ம் ஆண்டு கட்டப்பட்டது. இது, 1.2 மீ., உயரமும், 184 மீ., நீளமும் கொண்டது.மேற்கண்ட அணைக்கட்டில் சேகரிக்கப்படும் மழைநீர் மதகுகள் வழியாக, வல்லூர், மேலூர் ஆகிய பகுதிகளுக்கு கால்வாய் மூலம் கொண்டு செல்லப்பட்டு, பாசனம் மற்றும் குடிநீருக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.வறண்டு கிடந்த வல்லூர் அணைக்கட்டு, கொற்றலை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், தற்போது நிரம்பி வழிகிறது. வினாடிக்கு, 4,800 கனஅடி உபரிநீர் அணைக்கட்டில் இருந்து வெளியேறி, வங்காள விரிகுடா கடலுக்கு சென்று கொண்டிருக்கிறது. கடந்த, 2005ம் ஆண்டு, வல்லூர் அணைக்கட்டு நிரம்பியது; ஆனால், இந்த அளவிற்கு இல்லை எனவும், தற்போதுதான் நிரம்பி உள்ளது எனவும், பொதுப்பணி துறையினர் கூறி உள்ளனர்.

## கால்நடைகளுக்கு சிறப்பு முகாம்

திருத்தணி:வெள்ள நிவாரண கால்நடை சிறப்பு முகாமில், 7,500 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. திருத்தணி கோட்டத்தில் உள்ள கிராமங்களில், 10 நாட்கள் பெய்த கனமழையில், மழைநீர் குளம் போல் தேங்கியது. இதையடுத்து, ஆட்சியர் வீரராகவ ராவ் உத்தரவின் பேரில்,

வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ், கால்நடைகளுக்கு தொற்று நோய் பரவாமல் தடுக்க

**விளைநிலங்களில் மழைநீர் தேக்கம் :அழுகும் நிலையில் நெற்பயிர்கள்**

பொன்னேரி:விளை நிலங்களில் மழைநீர் வடியாமல் தேங்கி கிடப்பதால், நெற்

பயிர்கள் அழுகும் நிலையில் உள்ளன.மீஞ்சூர் ஒன்றியத்தில், சம்பா பருவத்திற்காக, 26 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், நெல் பயிரிடப்பட்டு உள்ளது. பொன்னேரியில், சில தினங்களாக பெய்த தொடர் மழையின் காரணமாக, விவசாய நிலங்களை ஒட்டி உள்ள ஏரி, குளங்கள் நிரம்பி உள்ளன.இதனால், வயல்வெளிகளில் உள்ள மழைநீர் வெளியேற முடியாமல், விளைநிலங்களில் தேங்கி கிடக்கிறது. அகரம், தேவம்பட்டு, எடகுப்பம், பெரியகரும்பூர் உள்ளிட்ட கிராமங்களில், மழைநீரை வெளியேற்ற முடியாமல், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

நெற்பயிர்கள் நீரில் மூழ்கி கிடப்பதால், அவை அழுகும் நிலையில் உள்ளன.

இதுகுறித்து, விவசாயிகள் கூறுகையில், "மழையை எதிர்பார்த்து காத்திருந்தோம். ஒரே நேரத்தில் பெய்த மழையால், நெற்பயிர்கள் பாழாகி உள்ளன. அடுத்த இரு தினங்களில் வயல்வெளியில் உள்ள மழைநீர் வடியாவிட்டால், மொத்த நெற்பயிரும் அழுகிவிடும்," என்றனர்.

**பூண்டி நீர்த்தேக்க உபரி நீர் :7வது நாளாக வெளியேற்றம்**

திருவள்ளூர்:பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து, ஏழாவது நாளாக, நேற்று, வினாடிக்கு 1,928 கன அடி வீதம், உபரி நீர் வெளியேற்றப்பட்டது.பத்து நாட்களாக பெய்து வரும் கனமழையால், பூண்டி நீர்த்தேக்கம், அதன் அதிகபட்ச கொள்ளளவான, 35 அடியில், தற்போது 33.71 அடி வரை தண்ணீர் தேங்கி உள்ளது.

நேற்று மதிய நிலவரப்படி, வினாடிக்கு 2,328 கன அடி வீதம் தண்ணீர் வரத்து இருந்தது. இதையடுத்து, நான்கு ஷட்டர்கள் திறக்கப்பட்டு, வினாடிக்கு, 1,928 கன அடி தண்ணீர், கொற்றலை ஆற்றில் வெளியேற்றப்பட்டது. நீர்த்தேக்கத்தில் 2,733 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது.

கொற்றலை ஆற்றில் திறக்கப்பட்ட தண்ணீர் காரணமாக ஒதப்பை, தாமரைப்பாக்கம் உள்ளிட்ட தாழ்வான இடங்களில், வெள்ள நீர் குடியிருப்பு பகுதிகளில் சூழ்ந்தது.

அங்கு தங்கியுள்ள பொதுமக்களை, பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு, மாவட்ட நிர்வாகம் தெரிவித்து உள்ளது.

மேலும், ஆரணி, கொற்றலை ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், யாரும் குளிக்க வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

**அணைகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி! வேளாண் பயிர் சாகுபடியில் அதிக ஆர்வம்**

கள்ளக்குறிச்சி: விழுப்புரம் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்மழையால் அணைகள் மற்றும் ஏரிகள் நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் வட கிழக்கு பருவ மழை தீவிரமாக பெய்து வருகிறது. கள்ளக்குறிச்சி பகுதியில் கோமுகி, மணிமுக்தா ஆகிய இரு அணைகள் மூலம் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. அதேபோல் வீடூர் அணை மூலம் 3,200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. மழைக் காலங்களில் அணைகள் நிரம்பி, ஷெட்டர்கள் மூலம் ஆற்று வழியாக வெளியேற்றப்படும் நீர், ஆற்றில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் மூலம் ஏரிகளுக்கு திருப்பி விட்டு, அவை விவசாயத்திற்கு யன்படுத்தப்படுகின்றன. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கிணற்று நீர் பாசனம் மூலம் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையில் நீர்நிலைகளுக்கு வரத்து அதிகரித்து அணைகள், ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் நிரம்பி

வருகின்றன. தற்போது பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அணைகளிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

கோமுகி அணை: கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணைக்கு கல்படை, பொட்டியம், மல்லிகைப்பாடி ஆறுகளின் வழியாக நீர் அணைக்கு வருகிறது. மொத்த கொள்ளளவான 46 அடியில் (561 மில்லியன் கன அடி), தற்போது 44 அடி (489 மில்லியன் கன அடி ) மட்டுமே இருப்பு வைக்க முடியும். இதனால் உபரி நீர் தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது.

கள்ளக்குறிச்சி பகுதியில் நேற்று 20 மி.மி., மழை பதிவாகியது. இதனால் அணைக்கு நீர் வரத்து மேலும் அதிகரிக்கும் என்பதால், பாதுகாப்பு கருதி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அணையின் நீர்மட்டத்தை 43 அடியாக குறைக்க, காலை 10:00 மணி முதல் நீர் வெளியேற் றும் அளவை படிப்படியாக உயர்த்தி வருகின்றனர். மேலும் புதிய ஷெட்டர்கள் மூலம் 2,500 கன அடி வரை நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் ஆற்றிலுள்ள 11 தடுப்பணைகளும் நிரம்பி, வெளியேறும் நீர் ஏரிகளுக்கும் செல்கிறது.

மணிமுக்தா அணை: சூளாங்குறிச்சியில் அமைந்துள்ள மணிமுக்தா அணைக்கு, கல்வராயன்மலையில் உருவாகும் மணி, முக்தா ஆகிய நதிகள், பாப்பாங்கால் ஓடை ஆகியவை மூலம் அணைக்கு நீர் வருகிறது. மொத்த கொள்ளளவான 36 அடியில் (736 மில்லியன் கன அடி) நேற்று முன் தினம் வரை 34 அடி (580 மில்லியன் கன அடி) வரை நீர் மட்டம் இருந்தது. நேற்று பலத்த மழை பெய்ததால் நீர் வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம் மேலும் உயர்ந்தன. இதனால் ஷெட்டர்கள் மூலம் வரத்து நீர் வெளியேற்றப்பட்டன.

பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பெரியசாமி, உதவி பொறியாளர் கணேசன் ஆகியோர் கண்காணிப்பில் ஈடுபட்டு காலை 6:00 மணி முதல் படிப்படியாக 2,220 கன அடி நீர் ஆற்று வழியாக வெளியேற்றி வருகின்றனர். கடந்த 2010ம் ஆண்டு தானே புயலின் போது அணையிலிருந்து ஆறு வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டன. அதன் பிறகு தற்போது முழு கொள்ளளவை

எட்டியுள்ளதால், தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் ஆற்றிலுள்ள 6 தடுப்பணைகள் நிரம்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

**வீடூர் அணை**

இதேபோல் வீடூர் அணையின் முழு கொள்ள ளவான 32 அடிக்கு, தற்போது 30 அடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இனிமேல் வரும் வரத்து நீரை வெளியேற்றும் வகையில் பொது பணித்துறையினர் அறிவிக்கவுள்ளனர். மாவட்டத்திலுள்ள ஏரிகளில் 50 சதவீதத்திற்கு மேல் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. மற்ற ஏரிகளும் ஓரிரு நாட்களில் முழு அளவை எட்டும் நிலை உள்ளது.கடந்த சில ஆண்டுகளுக்கு பிறகு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**உழவர் மன்ற துவக்க விழா**

விழுப்புரம்: விழுப்புரம் அடுத்த முகையூரில், நபார்டு வங்கி மூலம் உழவர் மன்ற துவக்க விழா நடந்தது.

மன்ற தலைவர் அந்தோணிதாஸ் தலைமை தாங் கினார். நிர்வாகி லூயிஸ் வரவேற்றார். ஊராட்சி தலைவர் மஞ்சுளா துரை, துணை தலைவர் ஏலென் செல்வநாதன், கவுன்சிலர் லலிதா பாண்டுரங்கன் முன் னிலை வகித்தனர். மேலாளர் ராஜேந்திரன், உழவர் மன்ற பெயர் பலகையை திறந்து வைத்தார்.

நபார்டு வங்கி மேலாளர் விக்ரமன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் வித்யாசாகர், பூமி கண்காணிப்பகம் நிர்வாகி ராதாகிருஷ்ணன், ஒருங்கிணைப்பா ளர் குமாரி, பாதிரியார்கள் ராய் ஆரோக்கியதாஸ், ராபர்ட், நிர்வாகிகள் சிவலிங்கம், சந்திரன் கலந்து கொண்டனர். சங்க பொருளாளர் ஜெகநாதன் நன்றி கூறினார்.

**விழுப்புரத்தில் 40 மி.மீ, மழை**

விழுப்புரம்: விழுப்புரத்தில் அதிகபட்சமாக 40 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வருகிறது. இதில், நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை 8:00 மணி வரை பெய்த மழையளவு : விழுப்புரத்தில் 40 மி.மீ., மழையும், திண்டிவனம் 4 மி.மீ., சங்கராபுரம் 13 மி.மீ., கள்ளக்குறிச்சி 14 மி.மீ., உளுந்தூர்பேட்டை 6 மி.மீ., மரக்காணத்தில் 14 மி.மீ., மழை பதிவாகியது. மாவட்டத்தில் மொத்தம் 128.5 மி.மீ., மழை பெய்துள்ளது.

## பலத்த மழையால் 3 ஆண்டுக்கு பின் கரியகோவில் அணை நிரம்புகிறது

வாழப்பாடி : சேலம் மாவட்டம், கல்வராயன் மலைப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால், கரியகோவில் அணையின் நீர்மட்டம், 46 அடியாக உயர்ந்தது.

பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா, பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில், கல்வராயன் மலை அடிவாரத்தில், வெள்ளாற்றின் குறுக்கே, 53 அடி உயரத்தில், 190 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கும் வகையில், 250 ஏக்கர் பரப்பளவில் கரியகோவில் அணை அமைந்துள்ளது. அணையால், பாப்பநாயக்கன்பட்டி, தும்பல், இடையப்பட்டி கிராமங்களில், 3,600 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. கடந்த, 2011 நவம்பர், டிசம்பர் மாதத்தில் கல்வராயன் மலைப்பகுதியில் பெய்த பலத்த மழையால், 2012 ஜனவரியில் கரியகோவில் அணை நிரம்பியது. அதன் பின், கடந்த மூன்றாண்டுகளாக கல்வராயன் மலைப்பகுதியில் போதிய மழையில்லாததால் அணை முழு கொள்ளளவை எட்டவில்லை. கடந்த மாத இறுதியில் கரியகோவில் அணையில், 23 அடி தண்ணீர் மட்டுமே சேறும் சகதியுமாக தேங்கி கிடந்தது. இந்த மாதம் பெய்த பருவமழையால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து, 43 அடியை தொட்டது.நேற்று, கல்வராயன் மலைப்பகுதியில் பெய்த பலத்த மழையால், ஒரே நாளில் அணையின் நீர்மட்டம், மூன்று அடி உயர்ந்து, 46 அடியானது. அணையில், 145 மில்லியன் கன அடி தேங்கியுள்ளது. வினாடிக்கு, 755 கன அடி தண்ணீர் வருகிறது. மழை தொடர்ந்தால், கரியகோவில் அணை ஓரிரு

நாட்களில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாண்டுக்கு பின் அணை நிரம்பி, வெள்ளாற்றில் உபரிநீர் திறக்கப்படுமென நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், ஆயக்கட்டு வாய்க்கால் பாசன விவசாயிகள் மட்டுமின்றி, வெள்ளாற்று படுகை கிராம விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கால்நடை மருத்துவமனைக்கு இரண்டு ஸ்கேனர் கருவிகள்**

திருச்செங்கோடு : திருச்செங்கோடு கால்நடை மருத்துவமனைக்கு, 15 லட்சம் ரூபாய் மதிப்பில் இரண்டு ஸ்கேனர் கருவிகளை, தமிழக தொழில் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் தங்கமணி வழங்கி துவக்கிவைத்தார். நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சணாமூர்த்தி தலைமை வகித்தார். பின்னர், திருச்செங்கோடு புதிய பஸ் ஸ்டாண்டில் மகளிர் சுய உதவிக் குழு சார்பில் அமைக்கப்பட்டிருந்த விற்பனை மையத்தை திறந்து வைத்தார். திருச்செங்கோடு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் சார்பில், கடந்தாண்டு அரசு பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண்களை பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளில், நாமக்கல் எம்.பி., சுந்தரம், சி.இ.ஓ., கோபிதாஸ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

நிமிர்ந்த நன்னடை தினமணி நேர்கொண்ட பார்வை

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பெரியாறு அணை நீர்மட்டம் 136 அடியை எட்டுகிறது**

முல்லைப் பெரியாறு அணை நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அணையின் நீர்மட்டம் 135.70 அடியாக உயர்ந்தது. திங்கள்கிழமை 136 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர் மழை காரணமாக, பெரியாறு அணை நீர்மட்டம் சீராக உயர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலை 135.40 அடியாகவும், மாலை 5 மணி நிலவரப்படி 135.70 அடியாகவும் இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து நொடிக்கு 2,213 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு நொடிக்கு 511 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பில் 5

மி.மீ., தேக்கடியில் 2.4 மி.மீ. மழை பதிவானது.

இந்த நிலையில், தொடர்ந்து நீர்வரத்து உள்ளதால், அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 136 அடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப் பணித் துறை பொறியாளர்கள் தெரிவித்தனர்.

**4 முக்கிய ஏரிகளிலும் நீர் இன்று நிரம்பும்?**

பலத்த மழையின் காரணமாக, சென்னையின் குடிநீர் ஆதாரங்களான 4 முக்கிய ஏரிகளும் முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளன. இவை திங்கள்கிழமை நிரம்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புழல், செம்பரம்பாக்கம், பூண்டி, சோழவரம் ஆகிய 4 ஏரிகளின் மொத்த நீர் கொள்ளளவு 110 கோடி கன அடி (11 டி.எம்.சி.) ஆகும். கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் இவற்றில் மொத்தம் 29 கோடி கன அடி (2.9 டி.எம்.சி.) நீர் இருந்தது.

இந்த ஏரிகளில் ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி 94 கோடி (9.4 டி.எம்.சி.) கன அடி தண்ணீர் உள்ளது.

நவம்பர் 10 முதல் 22-ஆம் தேதி வரை இடைப்பட்ட நாள்களில் பெய்த மழையால், 4 ஏரிகளில் மொத்தம் 80 கோடி கன அடி தண்ணீர் வந்துள்ளது. செம்பரம்பாக்கம், சோழவரம், பூண்டி ஆகிய ஏரிகள் முழு கொள்ளளவை நெருங்கியதால், பாதுகாப்பின் காரணமாக, உபரிநீர் திறந்து விடப்பட்டது. குறிப்பாக, செம்பரம்பாக்கம் ஏரியில் மட்டும் விநாடிக்கு 20,000 கன அடி வரையில் தண்ணீர் திறக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாக மிதமான மழை பெய்ததால், ஏரிக்கு வரும் நீரின் அளவு குறைந்தது. வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவும் குறைக்கப்பட்டது.

இந்த நிலையில், பலத்த மழை பெய்ததால் ஏரிகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. ஏறக்குறைய 1 டிஎம்சி தண்ணீர் வந்திருப்பதால் திங்கள்கிழமையன்று நான்கு ஏரிகளும் அதன் முழு கொள்ளளவை (11 டி.எம்.சி.) எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, ஏரிகளிலிருந்து 5,000 கன அடி முதல் 10,000 கன அடி வரை தண்ணீர் திறந்துவிடப்பட வாய்ப்புள்ளது.

சென்னையில் உள்ள நான்கு குடிநீர் ஏரிகளில் ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி நீர் இருப்பு விவரம்:- (மொத்த கொள்ளளவு அடைப்புக் குறிக்குள்)
பூண்டி ஏரி- 139 (140 அடி),
சோழவரம்- 61 (64.50 அடி),
புழல் ஏரி- 48 (50 அடி),
செம்பரம்பாக்கம்- 83.60 (85 அடி).

### வீடூர் அணையில் இருந்து உபரி நீர் வெளியேற்றம்: கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

விழுப்புரம் மாவட்டம் விக்ரவாண்டி வீடூர் அணையில் இருந்து இன்று காலை முதல் உபரி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதனால் அப்பகுதியில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தொடர் கனமழை காரணமாக அணைக்கு விநாடிக்கு 2,500 கனஅடிநீர் வந்து கொண்டிருக்கிறது. இதே அளவு தண்ணீர் அணையில் இருந்து வெளியேற்றப்படுகிறது. 32 அடி கொள்ளளவு கொண்ட வீடூர் அணையின் நீர்மட்டம் 31 அடியை நெருங்கி வருவதால், அணையில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதனால் கரையோர பகுதிகளில் உள்ள மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு

### புதிய காற்றழுத்த தாழ்வு நிலை: விடிய விடிய கன மழை

சென்னை நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகள் மக்கள் மீண்டும் அச்சத்தில் மூழ்கியுள்ளனர். மீண்டும் கன மழை பெய்து வருவதால் மறுபடியும் வெள்ளத்தில் மிதக்கும் நிலை ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்ப்பட்டுள்ளது. நேற்று இரவு முதல் பல பகுதிகளில் பெய்த பலத்த மழையால் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் உருவான புதிய காற்றழுத்த தாழ்வு நிலையால், சென்னை உட்பட வடமாவட்டங்களிலும், கடலோர மாவட்டங்களிலும், கன மழை பெய்யும் என்று சென்னை வானிலை

மையம் அறிவித்திருந்தது. அதன்படி, தமிழகம் முழுவதும் பெரும்பான்மையான இடங்களில் மழை பெய்தது. சென்னையில் காலையில் வெயில் அடித்தாலும், பின்னர் பல இடங்களில் அவ்வப்போது மழை பெய்தது.

நேற்று இரவு 8 மணியளவில் முகப்பேர், அம்பத்தூர், ஆவடி, எழும்பூர், சிந்தாதிரிபேட்டை, புரசைவாக்கம், மூலக்கடை, பெரம்பூர், கொளத்தூர், மாதவரம், புழல் உட்பட நகரின் பெரும்பான்மையான இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெரும்பாலான இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஏற்கனவே சாலைகளில் மழைநீர் தேங்கி நின்றதால், மீண்டும் பெய்த பலத்த மழையால் தண்ணீர் நிலை உயர்ந்துள்ளதால் வாகன ஓட்டிகள் மிகவும் அவதி அடைந்தனர்.

**கால்நடை பல்கலை.யில் புதிய தொழில்நுட்ப மையம் தொடக்கம்**



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மையத்தில் புதிய கண்டுபிடிப்பு, தொழில்நுட்ப மையம் அண்மையில் தொடங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சு.திலகர் மையத்தைத் திறந்து வைத்தார். மேலும், பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 20 சாதனங்களை அறிமுகப்படுத்தினார்.

20 சாதனங்கள்: நடமாடும் மருத்துவ வண்டி, பன்முகப் பயன்பாட்டுக்கான

இருசக்கர பண்ணை வண்டி, கால்நடைகளுக்கான குளிர்சாதன மின்விசிறி, நகரும் பாசனப் பன்முனை நீர்த்தெளிப்பான், ஆடுகளுக்கான, நகரும் உண்ணிகள் நீக்க குளியல் தொட்டி, பிறந்த ஆட்டுக் குட்டிகளுக்கான குளிர்தடுப்பான் கூண்டு, பன்றிகளுக்கான வெப்பமூட்டும் கருவி- குட்டி ஈனும் தண்டவாளக் கொட்டில், வெள்ளாடுகளுக்கான தீவனச் சட்டம், உலர்தீவனம் நறுக்கும் கருவி, வெண்பன்றிகளுக்கான பச்சைகுத்தும் கருவி, சாண வரட்டி தயாரிக்கும் கருவி, பல அடுக்குகள் கொண்ட பிளாஸ்டிக் முயல் கூண்டு, மற்றொரு வகையான பிளாஸ்டிக் முயல் கூண்டு, கொட்டில் முறையில் ஆடு வளர்ப்புக்கு உருவாக்கப்பட்ட சிறிய வகைக் கூண்டு ஆகிய 20 சாதனங்கள் நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தப்பட்டன.

பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் இணைந்து இந்தக் கருவிகளை உருவாக்கியுள்ளனர்.

இது குறித்து டாக்டர் சு.திலகர் கூறுகையில், கால்நடை வளர்ப்பு, தீவனப் பயிர் வளர்ப்பு, இறைச்சிக் கோழி வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு போன்ற கால்நடை சார்ந்த தொழில் வளர்ச்சிக்கும், அதன் அன்றாடப் பணிகளை விரைவாகச் செய்வதற்கும் ஏற்ற எளிய அறிவியல் சாதனங்கள் கண்டுபிடிக்கப்படுவது ஆரோக்கியமான காரியம் ஆகும் என்றார்.

**நாகை, திருவாரூர், காரைக்காலில் விடிய விடிய மழை: இயல்பு வாழ்க்கை பாதிப்பு**

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் பலத்த மழையால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை நள்ளிரவு தொடங்கிய மழை ஞாயிற்றுக்கிழமை முழுவதும் தொடர்ந்தது. காலை 10 மணிவரை காற்றுடன் கூடிய மழை பெய்தது. அதேபோல, பகல் முழுவதும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதோடு, அவ்வப்போது விட்டுவிட்டு மழை பெய்தது. இதனால் பெரும்பாலான மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கினர்.

நாகப்பட்டினத்தில்... நகரின் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்பட்டது.

சிக்கல் பகுதியில் நாகை- திருவாரூர் சாலை பாதிப்படைந்தது. மயிலாடுதுறை பகுதியில் வடபாதி, தென்பாதி, பனம்பள்ளி, வள்ளுவர் தெரு ஆகியவற்றில் குடியிருப்புகளை தண்ணீர் சூழ்ந்தது. சீர்காழி பகுதியிலும் இரணியன் நகர், தோப்புத்தெரு ஆகிய பகுதிகளை தண்ணீர் சூழ்ந்தது.

திருவாரூரில்... திருவாரூர், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, நீடாமங்கலம், குடவாசல் உள்ளிட்ட பகுதிகளில் சம்பா நெல் வயல்களில் மீண்டும் மழைநீர் தேங்கத் தொடங்கியுள்ளது. திருவாரூர் பேருந்து நிலையம், ரயில்வே கீழ்பாலம், நேதாஜி சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. கொரடாச்சேரி பகுதியில் சுவர் இடிந்து விழுந்ததில் முதியவர் உயிரிழந்தார்.

காரைக்காலில்... மழையால் காமராஜர் சாலை, புளியங்கொட்டை சாலை, தியாகராஜர் வீதி, திருநள்ளாறு சாலை, கடற்கரை சாலையில் தண்ணீர் வடிய பலமணி நேரம் ஆனது. திருநள்ளாறு வீதியில் உள்ள ஒரு பழைய கட்டடம் இடிந்து விழுந்தது.

நாகை, திருவாரூர் மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தலைஞாயிறில் அதிகபட்சமாக 49 மி.மீ. மழை பதிவானது.

மற்ற இடங்களில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): நாகப்பட்டினம் - 31.6, திருப்பூண்டி - 27.5, கொள்ளிடம் - 20, குடவாசல் - 41, திருத்துறைப்பூண்டி - 35, பாண்டவையாறு தலைப்பு - 29.06, திருவாரூர் - 27.04, நன்னிலம் - 23.08, முத்துப்பேட்டை - 21.20, மன்னார்குடி - 20, வலங்கைமான் - 17.04, நீடாமங்கலம் - 9.

**தூத்துக்குடி மீனவர்கள் இன்று கடலுக்கு செல்லவில்லை**

தூத்துக்குடி மீனவர்கள் இன்று கடலுக்குள் செல்லவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

கடந்த 21-ம் தேதி விசைப்படகு மீனவரான அந்தோணி ராஜ் விபத்தில் உயிரிழந்ததன் காரணமாக, அவருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், தூத்துக்குடியை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் இன்று கடலுக்குள் செல்லவில்லை. இதனால் 265 விசைப்படகுகள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன.

**குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரிப்பு: சுற்றுலா பயணிகள் குளிக்க தடை**

மேற்குதொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை பெய்து வருவதால் குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் குற்றலாத்தில் உள்ள பேரருவி, பழைய குற்றாலம், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது குற்றாலத்தில் சீசன் தொடங்கியுள்ளதாலும் நேற்று விடுமுறை நாள் என்பதாலும் சுற்றுலா பயணிகளும் கூட்டம் அதிகமாக இருந்தது.

### பாபநாசம் அணையில் 145 மி.மீ மழை: சேர்வலாறு அணை ஒரே நாளில் 9 அடி உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த பலத்த மழையால் ஒரே நாளில் பாபநாசம் அணையின் நீர்மட்டம் 5 அடியும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 9 அடியும் உயர்ந்துள்ளது. மணிமுத்தாறு அருவியில் கடும் வெள்ளம் ஏற்பட்டதால் குளிக்க தடை விதிக்கப்பட்டது.பருவ மழை நீடித்து வரும் நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதி, திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், தென்காசி, களக்காடு, நான்குனேரி, ஆலங்குளம் உள்பட பல்வேறு இடங்களில் திங்கள்கிழமை காலை வரை மழை நீடித்தது. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அதிகபட்சமாக பாபநாசம் அணை-145 மி.மீ, பாபநாசம் கீழ் அணை-120 மி.மீ, சேர்வலாறு அணை-110 மி.மீ, மணிமுத்தாறு அணை-66.2 மி.மீ மழை பெய்ததை அடுத்து அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 4727.15 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 113.45 அடியாக இருந்தது. சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 4200 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 9.19 அடி உயர்ந்து 132.35 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 1436 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 80.60 அடியாக இருந்தது. நீர்பிடிப்பு பகுதியில் நீர்வரத்து அதிகரித்ததால் மணிமுத்தாறு அருவியில் கடும் வெள்ளம் ஏற்பட்டதால் குளிக்க தடை விதிக்கப்பட்டது. திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை (மில்லி மீட்டரில்): கடனாநதி அணை-92, ராமநதி அணை-80, கருப்பாநதி அணை-9,

குண்டாறு அணை-4, அடவிநயினார் அணை-3, நம்பியாறு அணை-4, கொடுமுடியாறு அணை-7.
பாளையங்கோட்டை-17, திருநெல்வேலி-14.5, கன்னடியன் அணைக்கட்டு-73, அம்பாசமுத்திரம்-49, சேரன்மகாதேவி-38.2, களக்காடு-14.2, மூலக்கரைப்பட்டி-21.2, தென்காசி-7.4, செங்கோட்டை-2.2, ஆய்க்குடி-8.6, நான்குனேரி-40, ஆலங்குளம்-38.6 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

கடனாநதி அணைக்கு விநாடிக்கு 1700 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 300 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. இவ்விரு அணைகளும் நிரம்பியதை அடுத்து கருணை ஆறு, ராமநதி 2000 கனஅடி உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பாபநாசம் கீழ் அணை, தாமிரவருணி நதி ஓரங்களில் பலத்த மழை நீடித்ததால் தாமிரவருணி ஆற்றில் சுமார் 7000 கனஅடி தண்ணீர் செல்வதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதேபோல் நம்பியாறு அணை நிரம்பியதை அடுத்து அணையில் இருந்து 825 கனஅடி உபரிநீர் ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. வடக்குப் பச்சையாறு அணைக்கு 72 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 42 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. அணைகளின் நீர்மட்டம்: அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 132 அடியை எட்டியது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 83.50 அடி, ராமநதி அணையின் நீர்மட்டம் 82 அடி, கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 70.86 அடி, குண்டாறு அணையின் நீர்மட்டம் 36.10 அடி, வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 37 அடி, நம்பியாறு அணையின் நீர்மட்டம் 23 அடி, கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 46 அடியாக இருந்தது.

**டிச.4 முதல் சூரிய ஒளி தொழில்நுட்பப் பயிற்சி முகாம்**

பெங்களூரில் டிச.4-ஆம் தேதி முதல் சூரிய ஒளி தொழில்நுட்பப் பயிற்சி முகாம் நடக்கவுள்ளது.

இதுகுறித்து சூரிய ஒளி தொழில் மேம்பாட்டுத் திட்ட அலுவலகம் வெளியிட்ட செய்தி: இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பை உருவாக்குவதற்காக

பெங்களூரில் டிச.4-ஆம் தேதி முதல் 3 மாதங்களுக்கு சூரிய ஒளி தொழில்நுட்பப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. இந்தப் பயிற்சியில் சேர விரும்பும் இளைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

எலக்ட்ரிக்கல், மெக்கானிக்கல், எலக்ட்ரானிக்ஸ் பாடப் பிரிவுகளில் டிப்ளமோ அல்லது எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ், ஒயர்மேன், ஃபிட்டர், ஷீட்மெட்டல் பாடப் பிரிவுகளில் ஐடிஐ படித்த இளைஞர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள். இதைவிட அதிகம் படித்தோருக்கு பயிற்சியில் சேர அனுமதி கிடையாது. ஆர்வமுள்ளோர் நவ.26-ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களைச் செலுத்த வேண்டும். மேலும் விவரங்களுக்கு 080- 23626359, 9986045932, 9844049922 ஆகிய தொலைபேசி எண்கள் மற்றும் இணையதளத்தை அணுகலாம். மின்னஞ்சல் மூலம் விவரங்களைக் கேட்டுப் பெறலாம்.

**தோட்டக்கலை திட்டங்களுக்கு நிதியுதவி**

தோட்டக்கலை திட்டங்களுக்கு நிதியுதவி பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து தோட்டக் கலைத் துறை வெளியிட்ட செய்தி: தோட்டக் கலைத் துறையின் சார்பில், தேசிய தோட்டக் கலை திட்டத்தின் கீழ் பூந்தோட்டம், நாற்றுப் பண்ணை அமைக்க, காய்கறி விதை தயாரிக்க, தாவர திசு வளர்ப்பு, தோட்டக்கலை பயிர் விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. தனிப்பட்ட தண்ணீர் சேமிப்பு அலகுகள் கட்டுமானம், பாதுகாப்பான விவசாயத்துக்காக பசுமைக்குடில் அமைப்பது, வேலி அமைப்பது, பறவைப் பராமரிப்புக்கு தேவையான பொறிகள் கொள்முதல், தோட்டக்கலை கருவிகள் கொள்முதல், தோட்டக்கலை விளைப்பொருளை சந்தைக்கு கொண்டு செல்ல உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளவும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

தோட்டக்கலை விளைப்பொருள் அறுவடைக்குப் பிந்தைய சேவைகளை வழங்கும் பணிகள், கிடங்குகள் அமைக்க, முதன்மைப் பதனிடுதல் அலகு அமைக்க, வாழை, மாம்பழங்கள் கூழாக்கும் அலகு அமைக்க, குளிர்பதன் கிடங்குகள் அமைக்க, குளிர்பதன வாகனங்கள் கொள்முதல் செய்யவும் நிதி

உதவி வழங்கப்படுகிறது. இந்த நிதியுதவியைப் பெற விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள தோட்டக்கலை அலுவலகங்களை அணுகலாம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

**தில்லி உயிரியல் பூங்காவுக்கு புதிய விருந்தாளிகள்!**

தில்லி தேசிய உயிரியல் பூங்காவுக்கு புதிய விருந்தாளிகளாக, கேரள மாநிலம், திருவனந்தபுரம் உயிரியல் பூங்காவில் இருந்து ஒரு ஜோடி ரியா பறவைகள் வரவழைக்கப்பட்டுள்ளன. மேலும், அமெரிக்க முதலைகள், ஒரு கொம்பு ஆந்தைகள் உள்பட சில விலங்குகளும், பறவைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

தில்லி புராண கிலா பகுதியில் அமைந்துள்ள தேசிய உயிரியல் பூங்காவில் விலங்குகள், பறவைகள் என சுமார் 1,500 வகையான உயிரினங்கள் உள்ளன. குறிப்பாக, 642 பறவையினங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. விலங்கு பரிமாற்ற அடிப்படையில் பல்வேறு மாநில உயிரியல் பூங்காக்களில் இருந்து பறவைகள், விலங்குகள் தில்லி உயிரியல் பூங்காவுக்கு அவ்வப்போது கொண்டு வரப்படுகின்றன. இந்நிலையில், கேரள மாநிலம், திருவனந்தபுரம் உயிரியல் பூங்காவில் இருந்து ஒரு ஜோடி ரியா பறவைகள் அண்மையில் வரவழைக்கப்பட்டுள்ளன. இது குறித்து தேசிய உயிரியல் பூங்காவின் காப்பாட்சியர் ரியாஸ் கான் கூறியதாவது:

தில்லி உயிரியல் பூங்காவில் பல்வேறு பறவை இனங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஈமு, நெருப்புக்கோழி, கஸவெரி போன்ற பறக்க முடியாத பறவைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனினும், இதே வகையைச் சேர்ந்த ரியா பறவைகள் இல்லாத நிலை இருந்து வந்தது. இந்நிலையில், முதல் முறையாக அந்த வகையிலான ஒரு ஜோடி பறவைகள் திருவனந்தபுரத்தில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. இவை, தற்போது பராமரிப்புக் காலத்தில் வைக்கப்பட்டுள்ளன. குளிர்காலத்திற்குப் பிறகு பார்வையாளர்களுக்குத் திறந்துவிடப்பட உள்ளன.

ரியா பறவைகள் தவிர, கேரள உயிரியல் பூங்காவில் இருந்து பார்ன் ஆந்தை, அமெரிக்க முதலைகள், பெரிய இந்திய ஒரு கொம்பு ஆந்தை, பிராமினி கைட்ஸ், பானட் மெக்கே போன்ற பறவைகள், விலங்குகளும் பூங்காவுக்கு

வந்துள்ளன. இவை தற்போது பார்வையாளர்கள் பார்ப்பதற்குத் திறந்துவிடப்பட்டுள்ளன. இவை போன்று, எதிர்காலத்தில் இமயமலைக் கரடிகள், காண்டாமிருகம், நெருப்புக்கோழிகள் ஆகியவை தில்லி உயிரியல் பூங்கா மூலம் தருவிக்கப்பட உள்ளன என்றார் அவர்.

பூங்காவின் மற்றொரு அதிகாரி கூறுகையில், "ரியா பறவைகள் அதி உணர் திறன் மிக்கவை. இவை தென் அமெரிக்காவை வாழிடமாகக் கொண்டவை. தாக்குதல் ஆபத்தில் இருந்து தப்பிக்கும் வகையில் அடிக்கடி ஓடக் கூடியவை. இவற்றைத் தகுந்த வகையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றார்.

### செங்குன்றத்தில் 56 மி.மீ. மழை

திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த இரண்டு வாரங்களாக தொடர் மழை நீடிக்கிறது.

இதில், வெள்ளிக்கிழமை மாலை முதல் சனிக்கிழமை மாலை 4 மணி வரை மாவட்டத்தில் அதிகபட்சமாக செங்குன்றத்தில் 56 மில்லி மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக பள்ளிப்பட்டில் 8 மில்லி மீட்டர் மழை அளவும் பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் மழை அளவு (மில்லி மீட்டரில்): பொன்னேரி - 35, ஊத்துக்கோட்டை - 37, பள்ளிப்பட்டு - 8, கும்மிடிப்பூண்டி - 16, திருத்தணி - 10, திருவள்ளூர் - 15, பூந்தமல்லி - 27, அம்பத்தூர் - 36, பூண்டி - 18, செம்பரம்பாக்கம் - 15, சோழவரம் - 42, தாமரைப்பாக்கம் - 25, திருவாலங்காடு - 9, செங்குன்றம் - 56 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது.

### அமராவதி அணையின் நீர்மட்டம் 80 அடியாக உயர்ந்தது

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக உடுமலை அருகே உள்ள அமராவதி அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி 80 அடியை எட்டியுள்ளது.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலமாக திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும்,

நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்கி வருகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன் தென்மேற்குப் பருவ மழை பெய்தபோது அணைக்கு நீர்வரத்து அதிகமானதால் நீர்மட்டம் 80 அடியை எட்டும் நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அணையில் இருந்து பழைய, புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு போதுமான தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேலும் கரையோர கிராமங்களில் குடிநீர்ப் பிரச்னைகளும் தீர்க்கப்பட்டன.

இந்த நிலையில் அணையின் நீர் இருப்பை பொருத்து மீண்டும் பழைய, புதிய ஆயக்கட்டு நிலங்களுக்கு கடந்த செப்டம்பர், அக்டோபர் மாதம் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்தது.

இந்த நிலையில் கடந்த 20 நாள்களாகப் பெய்து வரும் வடகிழக்குப் பருவ மழையால் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருந்து அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 80 அடியை எட்டியது. இதனால் புதிய, பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அணை நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி நிலவரப்படி நீர் மட்டம் 78.05 அடியாக இருந்தது. அணைக்கு 909 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 14 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. அணைப் பகுதியில் மழைப் பொழிவு 6 மி.மீ. ஆகப் பதிவாகியிருந்தது.

## ஒரு கிலோ மல்லிகை விலை ரூ. 1,000

கார்த்திகை மாதம், முகூர்த்த காலம் காரணமாக ஒரு கிலோ மல்லிகை பூ ரூ. 1,000-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகம் முழுவதும் வடகிழக்குப் பருவ மழை பெய்து வருகிறது. இதே நிலை பல மாவட்டங்களிலும் நீடிப்பதால், காய்கறிகள் விலை கடுமையாக உயர்ந்ததோடு, பூக்கள் விளைச்சலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர், சத்தி போன்ற இடங்களிலும், திண்டுக்கல், நிலக்கோட்டை, சேலம் ஆகிய இடங்களிலும் மல்லிகை விளைச்சல் பாதிக்கப்பட்டதால் ஈரோட்டுக்கு மல்லிகைப் பூ வரத்து குறைந்தது.

இதன் காரணமாக, தீபாவளி பண்டிகையின்போது ஒரு கிலோ மல்லிகை ரூ. 1000-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, கார்த்திகை மாதம் தொடங்கியதாலும், முகூர்த்த காலம் என்பதாலும் மல்லிகை விலை குறையாமல் அதே விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல, மழை காரணமாக அனைத்துப் பூக்களின் வரத்தும் குறைந்து, தேவை அதிகரித்துள்ள நிலையில் அனைத்துப் பூக்களின் விலையும் உயர்ந்துள்ளது.

ஈரோட்டில் உள்ள பூ மண்டிகளில் ஞாயிற்றுக்கிழமை விற்பனை செய்யப்பட்ட பூக்களின் விலை விவரம் (கிலோவில்): மல்லிகை ரூ. 1000, முல்லை ரூ. 800, பட்டுப்பூ ரூ. 100, சம்பங்கி ரூ. 160, அரளி ரூ. 150, செவ்வந்தி ரூ. 100, ரோஜா ரூ. 150, காக்கடா ரூ. 400, செவ்வந்தி ரூ. 80 ஆகிய விலையில் பூக்கள் விற்பனை செய்யப்பட்டன.

இதுகுறித்து, பூ கமிஷன் மண்டி வியாபாரி ஆறுமுகம் கூறியதாவது:

கடந்த சில தினங்களாகவே அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருவதால் பூக்கள் விளைச்சல் பாதிக்கப்பட்டு ஈரோட்டுக்கு பூக்கள் வரத்து குறைவாக உள்ளது. இந்நிலையில், கார்த்திகை மாதம் பிறப்பு, முகூர்த்த காலம் என தொடர்ந்து வருவதால் பூக்களின் தேவை அதிகரித்து விலை உயர்ந்துள்ளது. மல்லிகை பூக்கள் விலை கடந்த 2 வாரங்களாகவே கிலோ ரூ. 1000 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

## திருநகர் காலனியில் ஒரு டன் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிப்பு

ஈரோடு மாநகராட்சிக்கு உள்பட்ட திருநகர் காலனியில் மட்டும் ஒரே மாதத்தில் ஒரு டன் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

பிளாஸ்டிக் உற்பத்தி, விற்பனையாளர்கள் சங்கம், ஒளிரும் ஈரோடு அறக்கட்டளை ஆகியவை சார்பில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி திருநகர் காலனியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை, மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தொடங்கி வைத்தார். ஈரோடு மாவட்ட பிளாஸ்டிக் உற்பத்தியாளர், விற்பனையாளர் சங்கத் தலைவர்

வெங்கடாசலம் தலைமை வகித்தார். சங்கச் செயலர் ஜெப்ரி, ஒளிரும் ஈரோடு தலைவர் சின்னசாமி, துணைத் தலைவர் யு.ஆர்.சி.தேவராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து, பிளாஸ்டிக் ஒழிப்பு, குப்பைகளை தரம் பிரித்து முறைப்படி அகற்றுவது குறித்த உறுதிமொழியை ஆட்சியர் பிரபாகர் முன்னிலையில் உறுப்பினர்கள் எடுத்துக் கொண்டனர்.

இதுகுறித்து, பிளாஸ்டிக் உற்பத்தி, விற்பனையாளர் சங்கத் தலைவர் வெங்கடாசலம் கூறியதாவது: கடந்த ஒரு மாதமாக திருநகர் காலனி பகுதியில் வீடு, வீடாகச் சென்று மக்களிடம் இருந்து மக்கும் குப்பைகளையும், மக்காத பிளாஸ்டிக் கழிவுகளையும் தனித்தனியே பிரித்து வாங்கி வருகிறோம்.

திருநகர் காலனியில் மட்டும் கடந்த ஒரு மாதத்தில் 4 ஆயிரம் கிலோ மக்கும் குப்பைகளையும், ஆயிரம் கிலோ பிளாஸ்டிக் கழிகளையும் தனியே பிரித்து மாநகராட்சியிடம் ஒப்படைத்துள்ளோம்.

பிளாஸ்டிக் கழிவுகள் மறு சுழற்சிக்கு உட்படுத்தப்படும். மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிப்பதற்கான பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தியைக் குறைத்து ஏற்கெனவே உள்ள பிளாஸ்டிக்கையே மறுசுழற்சி செய்து பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வையும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறோம் என்றார்.

**பெருந்துறையில் பரவலாக மழை**

பெருந்துறை, சென்னிமலை பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

தமிழகத்தில் காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதையொட்டி, பெருந்துறை, சென்னிமலை பகுதிகளில் உள்ள ஏரி, குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன.

பெருந்துறை, சென்னிமலை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் தொடர்ந்து லேசான மழை பெய்து வந்தது. இதனால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**பசுந்தேயிலை வார விலை நிர்ணயம்: தேயிலை வாரியம் சுற்றறிக்கை**

பசுந்தேயிலைக்கு வார விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக தேயிலை வாரியம் சார்பில் அதன் செயல் இயக்குநர் பால்ராசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தேயிலைகள் குன்னூரில் உள்ள அரசுக் கூட்டுறவு ஏல மையம், சிடிடிஏ ஏல மையம் மற்றும் கோவை, கொச்சி ஏல மையங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதனிடையே, பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்க வேண்டுமென விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். அதன்பேரில், ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைத் தூள்களுக்கு ஏற்றார்போல விலையை நிர்ணயம் செய்ய தேயிலை விலைக் கண்காணிப்புக் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்தக் கமிட்டி தேயிலை விற்பனையைக் கண்காணித்து, பசுந்தேயிலைக்கு உண்டான விலையை நிர்ணயம் செய்து வருகிறது. அதன்படி, கோத்தகிரி பகுதியில் பசுந்தேயிலைக்கு கிலோ ரூ. 19.27, கூடலூரில் ரூ. 10.79, பந்தலூரில் ரூ. 8.97, உதகையில் ரூ. 14.50 விலை வழங்கப்படும் என தேயிலை உற்பத்தியாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

**கால்வாய்கள் ஆக்கிரமிப்பு: பலத்தமழை பெய்தும் நிரம்பாத ஏரி**

வேலூர் மாவட்டம் முழுவதும் கடந்த 2 வாரங்களாக பெய்து வரும் தொடர் மழையால், மாவட்டம் முழுவதும் உள்ள பெரும்பாலான ஏரிகள், குளங்கள் நிரம்பி உள்ளன. இந்நிலையில் நாட்டறம்பள்ளி பேரூராட்சிக்கு உள்பட்ட பெரிய ஏரியில் இதுவரை தண்ணீர் நிரம்பவில்லை.

முன்பு நாட்டறம்பள்ளி சுற்றுப்புறத்தில் உள்ள விவசாயிகளுக்கு அதிகளவு ஏரிப் பாசனம் வழியாக தண்ணீர் தந்து கொண்டிருந்த ஏரியானது, இந்தளவுக்கு பலத்தமழை பெய்தும் நிரம்பாததால் விவசாயிகள், பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

இந்த ஏரிக்கு நாட்டறம்பள்ளியை அடுத்த மல்லானூர், கொத்தூர், பச்சூர் வழியாக கால்வாய் மூலம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால் தற்போது பச்சூர் அருகே குதுகுமேடு மதகு பகுதியிலிருந்து வரும் ஏரிக் கால்வாய் ஆக்கிரமிப்புகளால் காணாமல் போய் உள்ளது.

மேலும் கால்வாய் தூர் வாரப்படாமல் உள்ளதால் பல இடங்களில் செடிகள், முள்புதர்கள் அடர்ந்து தண்ணீர் வர வழியின்றி காணப்படுகிறது. எனவே ஏரிக் கால்வாய் ஆக்கிரமிப்பு, முள்புதர், செடிகளை போர்க்கால அடிப்படையில்

அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கால்வாய்கள் ஆக்கிரமிப்பு: பலத்தமழை பெய்தும் நிரம்பாத ஏரி**

வேலூர் மாவட்டம் முழுவதும் கடந்த 2 வாரங்களாக பெய்து வரும் தொடர் மழையால், மாவட்டம் முழுவதும் உள்ள பெரும்பாலான ஏரிகள், குளங்கள் நிரம்பி உள்ளன. இந்நிலையில் நாட்டறம்பள்ளி பேரூராட்சிக்கு உள்பட்ட பெரிய ஏரியில் இதுவரை தண்ணீர் நிரம்பவில்லை.

முன்பு நாட்டறம்பள்ளி சுற்றுப்புறத்தில் உள்ள விவசாயிகளுக்கு அதிகளவு ஏரிப் பாசனம் வழியாக தண்ணீர் தந்து கொண்டிருந்த ஏரியானது, இந்தளவுக்கு பலத்தமழை பெய்தும் நிரம்பாததால் விவசாயிகள், பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

இந்த ஏரிக்கு நாட்டறம்பள்ளியை அடுத்த மல்லானூர், கொத்தூர், பச்சூர் வழியாக கால்வாய் மூலம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால் தற்போது பச்சூர் அருகே குதுகுமேடு மதகு பகுதியிலிருந்து வரும் ஏரிக் கால்வாய் ஆக்கிரமிப்புகளால் காணாமல் போய் உள்ளது.

மேலும் கால்வாய் தூர் வாரப்படாமல் உள்ளதால் பல இடங்களில் செடிகள், முள்புதர்கள் அடர்ந்து தண்ணீர் வர வழியின்றி காணப்படுகிறது. எனவே ஏரிக் கால்வாய் ஆக்கிரமிப்பு, முள்புதர், செடிகளை போர்க்கால அடிப்படையில் அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**600 மாணவர்களுக்கு மரக்கன்றுகள்**

செஞ்சி வட்டம், கவரை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 600 மாணவ, மாணவிகளுக்கு மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

பசுமைக் கரங்கள் திட்டத்தின் கீழ், ஈஷா யோகா மையம் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் கு.ஜார்ஜ்ஸ்டீபன் தலைமை வகித்து மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.

தேக்கு, பூவரசன், புங்கன் உள்ளிட்ட பல்வேறு வகையான மரக் கன்றுகள் 600 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டன.

உதவித் தலைமை ஆசிரியர் ஏ.புஷ்பவள்ளி, ஆசிரியர்கள் சிவமுருகன், சுமதி, பாலமுருகன், சரவணராஜன், டி.முருகன், இ.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விழா ஏற்பாடுகளை பொறுப்பாசிரியர் மாரிமுத்து செய்திருந்தார்.**

**நிரம்பி வரும் ஏரிகள்**

தொடர் மழையால் புதுச்சேரியில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள பெரும்பாலான ஏரிகள் நிரம்பும் நிலையில் உள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

புதுச்சேரியில் வடகிழக்குப் பருவமழை கடந்த இரு வாரங்களாக விட்டு விட்டு பெய்து வருகிறது. இந்நிலையில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலையால் கடந்த சனிக்கிழமை இரவு முதல் மழை பெய்து வருகிறது. தொடர் மழையால் புதுச்சேரியில் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்து, நிரம்பி வருகின்றன.

முக்கிய ஏரியான ஊசுடு ஏரி வேகமாக நிரம்பி வருகிறது. மொத்தம் 3.5 மீட்டர் உயரம் உள்ள ஏரியில் தற்போது 2 மீட்டரை தாண்டி தண்ணீர் நிரம்பியுள்ளது. அதேபோல் 60 சதவீதத்துக்கு மேல் 30 ஏரிகள் நிரம்பியுள்ளன. சேதராப்பட்டு சித்தேரி, சேதராப்பட்டு பெரிய ஏரி, கரசூர் ஏரி ஆகியவை முழுக் கொள்ளளவை எட்டியுள்ளன. அதேபோல் பல சிறிய ஏரிகள் நிரம்பியுள்ளன.

**புதுவையில் 19% கூடுதல் மழை**

வடகிழக்குப் பருவமழை காலத்தில் புதுச்சேரியில் இதுவரை 19 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது.

தமிழகம், புதுவையில் கடந்த இரு வாரங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் நீர்நிலைகள் நிரம்பி வருகின்றன. தற்போதைய பருவமழை காலத்தில் அக்டோபர் 1ஆம் தேதி முதல் நவம்பர் 21ஆம் தேதி வரையிலான காலத்தில் புதுச்சேரி பகுதியில் 19 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது.

இந்த காலக்கட்டத்தில் புதுச்சேரியில் சராசரியாக 537.6 மி.மீ. மழை பெய்யும். ஆனால் தற்போது 637.9 மழை பெய்துள்ளது. இது இயல்பைக் காட்டிலும் 19 சதவீதம் கூடுதலாகும்.

அதேவேளையில் காரைக்காலில் ஒரு சதவீதம் குறைவான மழை பெய்துள்ளது. சராசரியாக காரைக்கால் பகுதியில் 622.2 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் 613.1 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இது ஒரு சதவீதம் குறைவாகும்.

புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளை உள்ளடங்கிய புதுவை மாநிலத்தை பொருத்தவரையில் நீண்ட நாள் சராசரியாக 567.2 மி.மீ. மழை பெய்ய வேண்டும். ஆனால் நவம்பர் 21ஆம் தேதி வரை 629.1 மி.மீ. மழை பெய்துள்ளது. இது 11 சதவீதம் கூடுதலாகும். இதே காலகட்டத்தில் தமிழகத்தில் 35 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது.

ஒரே வாரத்தில் கொட்டித் தீர்த்த மழை: தமிழகம், புதுவையில் இந்தாண்டு ஒரே வாரத்தில் அபரிமிதமான மழை பெய்துள்ளது. நவம்பர் 18ஆம் தேதி முடிந்த ஒரு வாரத்தில் மட்டும் புதுச்சேரி மாநிலத்தில் 152 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது. அந்த காலக்கட்டத்தில் புதுவையில் 72.7 மி.மீ. மழை மட்டுமே பெய்யும். ஆனால் 182.9 மி.மீ. மழை பெய்துள்ளது.

அதேவேளையில் புதுச்சேரி பகுதியில் மட்டும் 205 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது. 63.9 மி.மீ. மழை பெய்ய வேண்டிய காலத்தில் 195 மி.மீ. மழை புதுச்சேரி பகுதியில் பதிவாகியுள்ளது.

காரைக்காலில் 81 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது. நவம்பர் 18ஆம் தேதியுடன் முடிந்த வாரத்தில் தமிழகத்தில் 152 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது.

கடந்த ஆண்டு பற்றாக்குறை: கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின் போது புதுச்சேரி பகுதியில் 21 சதவீதம் பற்றாக்குறை மழையும், காரைக்காலில் 13 சதவீதம் பற்றாக்குறை மழையும் பெய்

திருந்தது.

நீண்ட நாள் சராசரியாக புதுச்சேரி பகுதியில் 843.1 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் கடந்த ஆண்டு 666.7 மி.மீ. மழை மட்டுமே பெய்தது. காரைக்காலில் 1048.5 மி.மீ. மழை பெய்வதற்கு பதிலாக 907.5 மி.மீ. மழை மட்டுமே பெய்திருந்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## சென்னையில் இடி, மின்னலுடன் பலத்த மழை தாழ்வான இடங்களில் மீண்டும் தண்ணீர் தேங்கியது



சென்னை,

சென்னையில் நேற்று பெரும்பாலான இடங்களில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மீண்டும் தண்ணீர் தேங்கியது.

<u>வடகிழக்கு பருவ மழை</u>

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை கடந்த 28–ந் தேதி தொடங்கியது. அப்போது வங்ககடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதியால், கடந்த 9–ந் தேதி முதல் 15–ந் தேதி வரை கொட்டித் தீர்த்த கன மழையால், சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம் ஆகிய மாவட்டங்கள் வெள்ளக்காடானது. மழை ஓய்ந்ததையடுத்து மழை நீர், மெல்ல மெல்ல வடியத் தொடங்கியது. பொதுமக்கள் இயல்பு நிலைக்கு திரும்பினார்கள். மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்ட 90 தற்காலிக முகாம்களில், 50 முகாம்கள் மூடப்பட்டன.

இந்தநிலையில், இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் உருவான புதிய காற்றழுத்த தாழ்வு நிலையால், சென்னை உட்பட வடமாவட்டங்களிலும், கடலோர மாவட்டங்களிலும், கன மழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் அறிவித்திருந்தது.

<u>மீண்டும் மழை</u>

அதன்படி, தமிழகம் முழுவதும் பெரும்பான்மையான இடங்களில் மழை பெய்தது. சென்னையில் காலை 11 மணி வரை வெயில் தலைக்காட்டினாலும், அதன் பின்னர் நகரில் பல இடங்களில் அவ்வப்போது மழை பெய்தது. இரவு 8 மணியளவில் எழும்பூர், சிந்தாதிரிபேட்டை, புரசைவாக்கம், மூலக்கடை, பெரம்பூர், கொளத்தூர், மாதவரம், புழல் உட்பட நகரின் பெரும்பான்மையான இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

மழையுடன் காற்றும் பலமாக வீசியது. இதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெரும்பாலான இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. தெருவிளக்கு மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. எனினும் ஒருசில இடங்களில் உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. சென்னையில் நேற்று இரவு பெய்த கனமழையால், மீண்டும் தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கத் தொடங்கியது. ஒருசில இடங்களில், ஆறாக பெருக்கெடுத்து ஓடியது. மீண்டும் மழை அச்சுறுத்துவதால், மக்கள் பீதியடைந்துள்ளனர்.

<u>சென்னை புறநகரில் பலத்த மழை</u>

சென்னை புறநகர் பகுதிகளில் நேற்று காலை முதல் விட்டு விட்டு மழை பெய்தது. மாலை முதல் பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்தது. ஏற்கனவே சாலைகளில் மழைநீர் தேங்கி நின்றதால் நேற்று பெய்த மழையால் மேலும் தண்ணீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் சிரமம் அடைந்தனர்.

செங்குன்றம், புழல், சோழவரம், மாதவரம், பால்பண்ணை, கொளத்தூர், வில்லிவாக்கம், ராஜமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் மாலை 5.30 மணியளவில் தொடங்கிய பலத்த மழை இரவு வரை நீடித்தது.

பல்லாவரம், தாம்பரம், பெருங்களத்தூர், அனாகாபுத்தூர் பகுதிகளில் நேற்று இரவு பலத்த மழை பெய்தது. அம்பத்தூர், பூந்தமல்லி, குன்றத்தூர், மாங்காடு, திருவேற்காடு, ஆவடி, பட்டாபிராம், திருநின்றவூர், திருமுல்லைவாயல்,

கோவில்பதாகை உள்ளிட்ட பகுதிகளில் விட்டு, விட்டு மழை பெய்தது. இதேபோல் சென்னை புறநகரின் பல்வேறு பகுதிகளில் நேற்று நல்ல மழை பெய்தது.

பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை

சென்னையில் தொடர் மழையின் காரணமாக பெரும்பாலான பள்ளிகள் மழைநீரால் சூழப்பட்டன. பெரும்பாலான சாலைகளிலும் குளம் போல் தண்ணீர் தேங்கியது. இதனால், சென்னையில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு கடந்த 9–ந் தேதி முதல் தொடர்ந்து விடுமுறை அறிவிக்கப்பட்டது. 23–ந் தேதி (இன்று) பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், நேற்று இரவு பெய்த கனமழை காரணமாகவும், வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை தொடர்ந்தும், சென்னையில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளுக்கு இன்றும் விடுமுறை அளித்து, மாவட்ட கலெக்டர் நேற்று இரவு உத்தரவு பிறப்பித்தார்.

## புழல் ஏரியில் இருந்து வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறப்பு



செங்குன்றம்,

புழல் ஏரியில் இருந்து வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

புழல் ஏரி

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் முக்கியமானது புழல் ஏரி ஆகும். இதன் மொத்த கொள்ளளவு 3 ஆயிரத்து 300 மில்லியன் கன அடி. தற்போது பெய்து வரும் பலத்த மழையால் நேற்று மாலை நிலவரப்படி 2 ஆயிரத்து 813 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரியின் உயரம் 21.04 அடி ஆகும். தற்போது 19 அடி தண்ணீர் உள்ளது.

ஏரிக்கு 613 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. 20 அடி உயரத்தை தாண்டினால் ஏரிக்கரைக்கு ஆபத்து ஏற்படும். நேற்று மாலை முதல் அந்த பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. இரவு மழை நீடித்தால் ஏரியில் 19 அடியை தாண்டி விடும். இதனால் ஏரிக்கரைக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் புழல் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விட பொதுப்பணித்துறை அதிகாரிகள் முடிவு செய்தனர்.

500 கனஅடி திறப்பு

இதையடுத்து நேற்று இரவு 7 மணியளவில் புழல் ஏரியில் ஒரு ஷட்டரை மட்டும் திறந்து வினாடிக்கு 500 கன அடி தண்ணீரை வெளியேற்ற முடிவு செய்யப்பட்டது. அதன்படி பொதுப்பணித்துறை இளநிலை பொறியாளர் அசோகன், முறைப்படி பூஜைகள் செய்து ஏரியின் மதகு ஷட்டரை திறந்து வைத்தார்.

ஏரியில் இருந்து வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அந்த நீர் கால்வாய் வழியாக செங்குன்றம் சாமியார்மடம், வடகரை, வடபெரும்பாக்கம், கொசப்பூர், ஆமுல்லைவாயல், சடையன்குப்பம் வழியாக சென்று எண்ணூரில் கடலில் கலக்கும்.

பொதுமக்களுக்கு தகவல்

தண்ணீர் திறந்து விடுவது குறித்து நேற்று மாலை 5 மணிக்கே முறைப்படி வருவாய்த்துறை மூலம் அப்பகுதி மக்களுக்கு தண்டோரா மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் மட்டும் திறந்து விடப்படுவதால் கால்வாய் ஓரம் உள்ள வீடுகளுக்கு எந்த பாதிப்பும் இருக்காது எனவும், மழை நீடித்தால் ஏரிக்கு நீர்வரத்து அதிகரிக்கும் போது கூடுதலாக ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விட வாய்ப்பு உள்ளதாகவும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதை ஏராளமான பொதுமக்கள் கால்வாய் அருகே நின்று வேடிக்கை பார்த்தனர். இதையடுத்து மாதவரம் துணை கமிஷனர் விமலா, புழல் உதவி கமிஷனர் மன்னர்மன்னன் மற்றும் போலீசார் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

கடந்த 2011–ம் ஆண்டு அக்டோபர் மாதம் இதேபோல் புழல் ஏரி நிரம்பி தண்ணீர் திறந்து விடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மாதவரத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை மேயர் பார்வையிட்டார்



செங்குன்றம்,

பலத்த மழையின் காரணமாக மாதவரம் மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளான பிரகாஷ் நகர், கணபதி நகர், சந்திரபிரபு காலனி, சீதாபதி நகர், வெங்கடசாய்நகர், ஆசிரியர்கள் காலனி உள்பட பல்வேறு பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் மழைநீர் புகுந்து பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பல இடங்களில் மழைநீர் இன்னும் வடியாமல் தேங்கி உள்ளது. அதனுடன் கழிவுநீரும் கலந்து துர்நாற்றம் வீசுவதால் தொற்று நோய் பரவும் அபாயம் இருந்து வருகிறது.

இந்த நிலையில் சென்னை மாநகராட்சி மேயர் சைதை துரைசாமி, வெள்ள நிவாரண சிறப்பு அதிகாரி சந்திரசேகர் ஆகியோர் அந்த பகுதியில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட்டனர். அப்போது அவர்களுடன் மாதவரம் தொகுதி எம்.எல்.ஏ. மூர்த்தி, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குழுவைச் சேர்ந்த பணீந்தர ரெட்டி, துணை மேயர் பெஞ்சமின், மாதவரம் மண்டலக்குழு தலைவர்

வேலாயுதம், கவுன்சிலர் சாந்தி எத்திராஜ், வட்டசெயலாளர் எத்திராஜன் மற்றும் மாதவரம் மண்டல பொறியாளர்கள், பொதுபணித்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மேயர் சைதை துரைசாமி, வெள்ளம் புகுந்த வீடுகளை பார்வையிட்டு மோட்டார்கள் மூலம் உடனடியாக தண்ணீரை வெளியேற்ற வேண்டும் என்றும், தொற்று நோய் பரவாமல் இருக்க சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்த வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**கன்னியாகுமரி கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பு தமிழகம் முழுவதும் பரவலாக மழை சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரத்தில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை**



சென்னை,

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை காலம் கடந்த மாதம் (அக்டோபர்) 28-ந் தேதி தொடங்கியது.அப்போது முதல் மாநிலம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்தது. இதன் காரணமாக, பலத்த மழை பெய்த பெரும்பாலான மாவட்டங்களில் உள்ள குளங் கள், ஏரிகள் மற்றும் நீர்நிலைகள் முழுமையாக நிரம்பின. பல இடங்களில் படிப்படியாக நிரம்பி வருகின்றன.

**புதிய காற்றழுத்த தாழ்வு நிலை**

இந்த நிலையில், நேற்று முன்தினம் தென்மேற்கு வங்க கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. தற்போது அது கன்னியாகுமரி கடல் பகுதியில் தொடர்ந்து நீடிக்கிறது. இதனால் தமிழகம் முழுவதும் பரவலாக

பலத்த மழை பெய்து வருகிறது.

இந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடலோர மாவட்டங்களில் இன்றும் (திங்கட்கிழமை) மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

**குமரிக்கடல் பகுதியில்...**

இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடலில் நேற்று (நேற்று முன்தினம்) உருவான புதிய காற்றழுத்த தாழ்வுநிலை, இன்று (நேற்று) காலை 8.30 மணி நேர நிலவரப்படி, மேற்கு நோக்கி நகர்ந்து, குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் காற்றழுத்த தாழ்வுநிலையாக நீடிக்கிறது.

இதனால் கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும், உள் மாவட்டங்களிலும் நல்ல மழை பெய்துள்ளது. இந்த நிலையில் அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று) கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்யும்.

கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையோ அல்லது மிக கனமழையோ இருக்கக்கூடும். உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

**படிப்படியாக குறையும்**

சென்னையை பொறுத்தவரையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். விட்டு விட்டு மழை பெய்யும். சில நேரங்களில் கனமழை பெய்யக்கூடும். குமரிக்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை, மேற்கு நோக்கி நகர்வதால், காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாற வாய்ப்பு இல்லை.

வரக்கூடிய நாட்களில் கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் மழை இருக்கும். வருகிற 25-

ந்தேதி(புதன்கிழமை) முதல் இந்த மழை அளவு படிப்படியாக குறையும்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

**மழை அளவு**

இலுப்பூர் 9 செ.மீ., கடலாடி, புதுச்சேரி ஆகிய இடங்களில் தலா 7 செ.மீ., ஆர்.எஸ்.மங்களம், ராமநாதபுரம் ஆகிய இடங்களில் தலா 6 செ.மீ., சோழவரம் 5 செ.மீ., மன்னார்குடி, குடவாசல், விழுப்புரம், அம்பாசமுத்திரம், செங்குன்றம், சிதம்பரம், கமுதி ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ., திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, ஆடுதுறை, மணிமுத்தாறு, தாமரைப்பாக்கம், நாகப்பட்டினம், கடலூர், நிலக்கோட்டை, கும்பகோணம், திருவிடைமருதூர், தொண்டி, காவேரிப்பாக்கம், அதிராம்பட்டினம், மதுக்கூர், திருவாரூர், பூந்தமல்லி ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ. மழை பெய்து உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை**

தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் சென்னை, காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், நாகை, திருவாரூர், வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களிலும் புதுச்சேரி மாநிலத்திலும் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு இருக்கிறது. திருவள்ளூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டு உள்ளது.

**மும்பை, தானேயில் மீண்டும் மழை**



மும்பை,

மும்பை, நவிமும்பை, தானே பகுதிகளில் நேற்றுமுன்தினம் திடீரென மழை பெய்தது. நேற்று இந்த பகுதிகளில் காலை வழக்கம்போல் வெயிலின் தாக்கம் இருந்தது. மதியம் வானில் கரு மேகங்கள் திரண்டு மந்தமான வானிலை நிலவியது. இந்தநிலையில் மும்பையில் இரவு சுன்னாப்பட்டி உள்பட பல்வேறு இடங்களில் பரவலாக பலத்த மழை பெய்தது. நவிமும்பையில் பிற்பகல் 3.30 மணியில் இருந்து மாலை 5.30 மணி வரை மழை பெய்தது. பின்னர் இரவு 7 மணிக்கு பெய்ய தொடங்கிய மழை இடி, மின்னலுடன் பலத்த மழையாக பெய்தது. அப்போது பலத்த காற்றும் வீசியது. இதுபோல் தானேயிலும் பலத்த மழை பெய்தது. இதனால் சாலை மற்றும் தெருக்களில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி நின்றதை காண முடிந்தது.

மழைக்காலம் முடிந்த பின்னர் கடந்த 2 நாட்களாக பெய்த மழையால் மும்பை, நவிமும்பை மற்றும் தானேவாசிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பெங்களூருவில் நீர்நிலைகள் சுருங்கிவிட்டன நகர்மயமாதல் அதிகரிப்பால் பசுமைமயம் குறைந்துவிட்டது ஆய்வில் தகவல்



பெங்களூரு,

பெங்களூருவில் நகர்மயமாதல் அதிகரிப்பால் பசுமைமயம் குறைந்துவிட்டதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

பசுமைமயம் குறைந்தது

இந்திய அறிவியல் கழக(ஐ.ஐ.எஸ்.சி.) குழுவினர் இந்தியாவின் ‘சிலிக்கான் பள்ளத்தாக்கு‘ என்று அழைக்கப்படும் பெங்களூருவில் பசுமைமயம் மற்றும் நகர்மயமாதல் குறித்து 1999-ம் ஆண்டில் இருந்து 2014-ம் ஆண்டு வரை ஆய்வு நடத்தினார்கள். அவர்கள் புதிய மென்பொருளை பயன்படுத்தி நில செயற்கைகோள் மூலம் பெங்களூருவில் நிலத்தை பயன்படுத்தும் முறை, நகரில் உண்டாகும் மாற்றங்கள் குறித்தும் ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வு காலத்தில் பெங்களூரு 4.6 சதவீத அளவில் நகர்மயமாகி இருப்பதையும், தாவரங்கள் அதாவது மரங்கள் எண்ணிக்கையும், நீர்நிலைகள் 62 சதவீதம் முதல் 85 சதவீதம் வரை சுருங்கிவிட்டன என்பதும் தெரியவந்துள்ளது. தற்போது நீர்நிலைகள் 0.74 சதவீதம் தான் உயிருடன் உள்ளது. 2000-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரை நகர்மயமாதல் 125 சதவீதம் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக பெங்களூருவின் பசுமைமயம் குறைந்துவிட்டது.

தாவரவியல் நிலப்பரப்பு

நகரில் உள்ள நிலங்களில் கட்டிடங்கள் கட்டுவது, சாலைகள் அமைப்பது 184 சதவீதம் அதிகரித்துவிட்டது. தாவரவியல் நிலப்பரப்பு 45 சதவீதத்தில் இருந்து 8.4 சதவீதமாக குறைந்துவிட்டது. நகரில் அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து ஆய்வாளர் ஆய்தல் கூறுகையில், “பெங்களூரு வேலை வாய்ப்புகளின் புகழிடமாக மாறிவிட்டது. தொழில் துறையில் குறிப்பாக மென்பொருள் உற்பத்தியில் மிகப்பெரிய வளர்ச்சியை காண முடிகிறது. பெங்களூருவுக்கு மக்கள் அதிகளவில் இடம் பெயர்ந்து வருவதால் இங்கு சுற்றுச்சூழல் மீது மிகப்பெரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக கடுமையான போக்குவரத்து நெரிசல் உண்டாகிறது. இதனால் வேலைக்கு செல்பவர்கள் தாங்கள் பணியாற்றும் பகுதியிலேயே குடியிருக்க விரும்புகிறார்கள்“ என்றார்.

## சங்கராபரணி ஆற்றில் வெள்ளம் வரவாய்ப்பு: ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் கலெக்டர் மணிகண்டன் வேண்டுகோள்



புதுச்சேரி,

சங்காரபரணி ஆற்றில் வெள்ளம் வர வாய்ப்பு உள்ளதால் ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று கலெக்டர் மணிகண்டன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<u>மழை தீவிரம்</u>

தமிழகம்–புதுச்சேரியில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இந்த மழை காரணமாக நாள்தோறும் கனமழை கொட்டி வருகிறது.

இதனால் நீர்நிலைகள் விரைவாக நிரம்பி வருகின்றன. புதுவையில் உள்ள ஏரிகளும் தற்போது நிரம்பி வருகின்றன.

<u>வீடூர் அணை</u>

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வீடூர் அணை தற்போது வேகமாக நிரம்பி வருகிறது. 32அடி உயரம் உள்ள இந்த அணையில் நேற்று மாலை நிலவரப்படி 30அடி தண்ணீர் உள்ளது.

தொடர்ந்து மழை பெய்யும் சூழலில் இன்று (திங்கட்கிழமை) இரவுக்குள் அணை நிரம்பிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அணை நிரம்பினால் தண்ணீர் திறக்கப்பட்டு சங்காரபரணி ஆற்றில் வெள்ளம் பாய்ந்தோடும்.

<u>கலெக்டர் வேண்டுகோள்</u>

எனவே புதுவையில் சங்கராபரணி ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு பொதுமக்களை அறிவுறுத்த வருவாய்த்துறையினருக்கு கலெக்டர் மணிகண்டன் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து கலெக்டர் மணிகண்டன் கூறியதாவது:–

வீடூர் அணையில் மாலை நிலவரப்படி 30அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. அதன் நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. எனவே அணை நிரம்பும் சூழல் ஏற்பட்டுள்ளது.

எனவே சங்கராபரணி ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களுக்கு முதல்கட்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆற்றோரம் வசிப்பவர்கள் கவனமாக இருக்கவேண்டும், ஆற்றுக்குள் இறங்கவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்கள் தங்க ஏதுவாக அந்தந்த பகுதியில் உள்ள பள்ளிகள், சமுதாய நலக்கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதிகாரிகளும், ஊழியர்களும் 24மணிநேரமும் உஷாராய் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கலெக்டர் மணிகண்டன் கூறினார்.

## புதுச்சேரியில் 26 ஏரிகள் நிரம்பின




புதுச்சேரி

புதுவையில் பெய்துவரும் அடைமழை காரணமாக 26 ஏரிகள் நிரம்பியுள்ளன.

<u>கனமழை</u>

புதுவையில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதன் காரணமாக புதுவையில் உள்ள ஏரிகள் நிரம்பி வருகின்றன.

புதுவையை பொறுத்தவரை சிறியதும், பெரியதுமாக 84ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகள் அனைத்தும் தற்போது நிரம்பி வருகின்றன.

<u>26ஏரிகள்</u>

கிருமாம்பாக்கம் ஏரி, அரங்கனூர் ஏரி, சித்தேரி, பனையடிக்குப்பம் ஏரி, பின்னாச்சிக்குப்பம், அரங்கனூர், குருவிநத்தம், மணப்பட்டு, காட்டுக்குப்பம் ஏரி உள்பட 26 ஏரிகள் நிரம்பி வழிகின்றன.

மிகப்பெரிய ஏரிகளான ஊசுட்டோரி (3.5மீ.), பாகூர் ஏரி (3.6மீ) ஆகிய ஏரிகளுக்கும் கணிசமான அளவுக்கு நீர் வரத்து உள்ளது. இந்த ஏரிகளும் நிரம்பி வருகின்றன. ஊசுட்டேரியில் 2மீட்டரும், பாகூர் ஏரியில் 3மீட்டர் உயரத்துக்கும் தண்ணீர் நிரம்பியுள்ளது. இதேபோல் ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ள படுகை அணைகளும் நிரம்பி வழிகின்றன.

<u>வெள்ளப்பெருக்கு</u>

ஊசுட்டேரியை பொறுத்தரை வீடூர் அணையிலிருந்து தண்ணீர் வந்தால் விரைவில் நிரம்பிவிடும். 32அடி உயரம் உள்ள வீடூர் அணையில் இப்போது 30அடி உயரத்துக்கு தண்ணீர் உள்ளது.

நேற்று பெய்ததுபோல் கனமழை தொடர்ந்து பெய்தால் இன்று இரவுக்குள் அந்த ஏரி நிரம்பிவிடும் சூழல் உள்ளது. அப்படி ஏரி நிரம்பினால் அணை திறக்கப்பட்டு சங்கராபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். எனவே புதுவை மாவட்ட நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளது. வீடூர் அணை எந்த நேரமும் திறக்கப்படும் நிலையில் இருப்பதால் சங்கராபரணி ஆற்றங்கரையோரம் வசிக்கும் புதுவை மக்களுக்கு முதல்கட்ட வெள்ள எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் ஆறு, கால்வாய்களில் ஏதேனும் உடைப்புகள் ஏற்பட்டால் அடைப்பதற்கு ஏதுவாக பொதுப்பணித்துறையினர் தயார் நிலையில் உள்ளனர்.

## மீனவ பெண்களுக்கு புயல் நிவாரணம் வழங்கிட வேண்டும் உலக மீனவர் தினத்தில் தீர்மானம்



அரியாங்குப்பம்,

புதுவை மாநிலம் அரியாங்குப்பம் அடுத்த வீராம்பட்டினம் மீனவ கிராமத்தில் புதுச்சேரி மாநில மீனவர்கள் சங்கம் சார்பில் உலக மீனவர்கள் தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு, சங்க தலைவர் நாராயணசாமி தலைமை தாங்கி, சங்க கொடியை ஏற்றினார். அதனை தொடர்ந்து அப்பகுதியில் இருந்த சிங்காரவேலர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில், சங்க பொருளாளர் வீரசேகர் வரவேற்றார். செயலாளர்கள் ரத்தினவேலு, குமார் மற்றும் பாலு, இணைச்செயலாளர்கள் சண்முகசுந்தரம், சதீஷ் மற்றும் கோபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழச்சியில் துணைச்செயலாளர்கள் சுப்ரமணி, சிவலிங்கம் நிர்வாகிகளும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். முடிவில் ஆலோசகர் அசோகா சுப்ரமணியன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

* கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழை மற்றும் பலத்த காற்றால் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதால் ரேஷன் கார்டு ஒன்றுக்கு அரசு சார்பில் தலா ரூ 5 ஆயிரம் நிவாரணமாக வழங்க வேண்டும்.

* புதுவை அரசால் வழங்கப்படுகின்ற மீனவ பெண்களுக்கான புயல் நிவாரணம் இதுநாள் வரை வழங்கவில்லை. இந்த நிவாரணத்தை காலம் தாழ்த்தாமல் உடனே வழங்கிட வேண்டும்.

* நடந்து முடிந்த யு.டி.சி. தேர்வில் மீனவ சமுதாய மாணவர்களுக்கு 2 சதவீதம் கொடுக்கப்பட்டது. இதனால் பெரும்பாலான மாணவர்கள் பாதிக்கப்பட்டதால்

வரும் ஆண்டில் 5 சதவீதமாக உயர்த்திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## நெகமம் பகுதியில் தொடர் மழை: கொப்பரை தேங்காய் உற்பத்தி பாதிப்பு



நெகமம்

நெகமம் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் கொப்பரை தேங்காய் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

<u>கொப்பரை தேங்காய்</u>

நெகமம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான சின்ன நெகமம், உதவிபாளையம், கல்லிபட்டி, கரப்பாடி, அய்யம்பாளையம், என்.சந்திராபுரம், கொண்டேகவுண்டன் பாளையம், ஆவலப்பம்பட்டி, குருவேகவுண்டன் பாளையம், ஆண்டிபாளையம், வீதம்பட்டி, பூசாரிபட்டி, எம்.மே.கவுண்டன் பாளையம், தேவணாம்பாளையம் உள்பட பல்வேறு பகுதிகளில் தென்னை மரங்கள் அதிகளவு உள்ளன.

இதன்காரணமாக மேற்கண்ட பகுதிகளில் கொப்பரை தேங்காய் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்காக 300–க்கும் மேற்பட்ட உலர்களங்கள் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொப்பரை தேங்காய் காங்கயம், வெள்ளக்கோவில் உள்பட பல்வேறு இடங்களில் உள்ள தேங்காய் எண்ணெய் மில்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், வியாபாரிகளும் நேரடியாக கொள்முதல் செய்து வருகிறார்கள்.

<u>தொடர் மழை</u>

இந்த நிலையில் நெகமம் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 3 வார காலமாக அவ்வப்போது லேசான மழையும், பலத்த மழையும் மாறி, மாறி

பெய்து வருகிறது. மேலும் மேக மூட்டமும் அதிகமாக காணப்படுகிறது. இதன் காரணமாக கொப்பரை தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும், உற்பத்தி உலர் களங்கள் ஈரப்பதத்துடன் காட்சி அளிக்கிறது. இதனால் கொப்பரை தேங்காய்களை உலர் களங்களில் உடைத்துபோடும் பணியை தற்காலிகமாக விவசாயிகள் நிறுத்தி வைத்து உள்ளனர்.

இதனால் மரம் ஏறும் தொழிலாளர்கள், தேங்காய்களை உடைத்து உலர்களங்களில் போடும் தொழிலாளர்கள், பாரம் தூக்கும் தொழிலாளர்கள் வேலை இழந்து உள்ளனர்.

<u>உற்பத்தி பாதிப்பு</u>

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:– கொப்பரை தேங்காய் உற்பத்திக்கு வெயில் மிகவும் அவசியம். வெயில் அடித்தால் ஒரு வாரத்துக்குள் கொப்பரை தேங்காய் கிடைக்கும். ஆனால் மழை பெய்தால் கொப்பரை தேங்காய் உற்பத்தி செய்ய முடியாது. மேக மூட்டம் காணப்பட்டால் கொப்பரை தேங்காய் உற்பத்தியாக 15 நாட்கள் வரை ஆகும்.

நெகமம் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளில் தினமும் 300 கிலோ கொப்பரை தேங்காய் உற்பத்தி செய்யப்படும். ஆனால் தற்போது தொடர் மழை பெய்து வருவதால், கொப்பரை தேங்காய் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து குறைந்தது



பொள்ளாச்சி,

மழையின் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து குறைந்தது.

<u>வாழைத்தார் ஏலம்</u>

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. ஏலத்துக்கு ஆனைமலை, அம்பரம்பாளையம், கிணத்துக்கடவு, சுல்தான்பேட்டை, தஞ்சாவூர், தூத்துக்குடி உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள்.

இவற்றை உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் ஏலம் மூலம் வாங்கி சென்று விற்பனை செய்கிறார்கள். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது.

<u>வரத்து குறைந்தது</u>

ஏலத்துக்கு மொத்தம் 1500 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. இதில் பூவந்தார் ஒன்று ரூ.100 முதல் ரூ.400 வரைக்கும், கற்பூரவள்ளி ரூ.150 முதல் ரூ.450 வரைக்கும், மோரீஸ் ரூ.100 முதல் ரூ.300 வரையும், ரஸ்தாளி ரூ.100

முதல் ரூ.500 வரையும், செவ்வாழை ரூ.300 முதல் ரூ.800 வரையும், நேந்திரம் ஒரு கிலோ ரூ.19–க்கும், கதளி ஒரு கிலோ ரூ.20–க்கும் ஏலம் சென்றது.

இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது:– பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாரந்தோறும் 200 வாழைத்தார்கள் விற்பனைக்கு வரும். ஆனால் தற்போது மழை பெய்து வருவதால் 1500 தார்களே ஏலத்துக்கு வந்தன. மேலும், கடந்த வார விலையிலேயே தார்கள் ஏலம் சென்றன.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## கொல்லிமலை ஆகாயகங்கை நீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை



நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக கொல்லிமலை ஆகாயகங்கை நீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. எனவே அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்து உள்ளனர்.

தொடர்மழை

நாமக்கல் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக ஏரி, குளங்கள் நிரம்பி வருகின்றன. ஆங்காங்கே விவசாய பணிகளும் தொடங்கப்பட்டு உள்ளது. இதேபோல கொல்லிமலையில் சமீபத்தில் பெய்த தொடர் மழையின் காரணமாக அங்குள்ள ஆகாயகங்கை நீர்வீழ்ச்சியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

சுமார் 140 அடி உயரத்தில் இருந்து பயங்கர சத்தத்துடன் தண்ணீர் கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் ஆகாயகங்கை நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்கு வனத்துறையினர் தடை விதித்து உள்ளனர்.

சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

முன்எச்சரிக்கை நடவடிக்கையாக நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டு இருப்பதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும் அருவியை பார்வையிட அனுமதிக்கப்பட்டு உள்ளது. சுமார் 500 அடி தூரத்திற்கு வரும் அருவியின் சாரலை சுற்றுலா பயணிகள் அனுபவித்து செல்கின்றனர்.

இதேபோல் தொடர்மழை காரணமாக கொல்லிமலையில் உள்ள மாசில்லா அருவி, நம் அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. இங்கு சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல் போட்டு செல்கின்றனர்.

தினகரன்

**குமரி கடற்பகுதியில் காற்றழுத்தம் பல மாவட்டங்களில் மீண்டும் கனமழை**



தஞ்சை: கன்னியாகுமரி கடற்பகுதியில் காற்றழுத்தம் காரணமாக தமிழகத்தின் பல இடங்களில் நேற்றும் கனமழை கொட்டித்தீர்த்தது. இலங்கை அருகே மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை மேற்கு நோக்கி நகர்ந்து கன்னியாகுமரி கடல் பகுதியில் நீடிக்கிறது. இதன்காரணமாக கடலோர மற்றும் உள்மாவட்டங்களில் நேற்றும் மழை கொட்டித்தீர்த்தது. தஞ்சையில் நேற்று அதிகாலை முதல் பலத்த மழை பெய்தது. பூதலூர் அருகே சோழகம்பட்டி காட்டாறில் ஏற்பட்ட அடைப்பால் ஊருக்குள் தண்ணீர் புகுந்தது. தகவல் அறிந்ததும் காட்டாற்றின் அடைப்புகளை அதிகாரிகள் சீரமைத்தனர். திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி, முத்துப்பேட்டை, நன்னிலம் ஆகிய பகுதிகளில் நேற்று காலை முதல் மழை பெய்தது. பிற்பகலில் கும்மிருட்டாக காணப்பட்டது. நாகை, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் லேசான மழை பெய்தது. தர்மபுரி , சேலத்தில் காலை 10 மணிக்கு தொடங்கிய சாரல் மழை மாலை வரை நீடித்தது. நாமக்கல் மாவட்டத்தில் ராசிபுரம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில் மழை நீடித்தது. வேலூரில் நேற்று நாள் முழுவதும் மழை பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் பல இடங்களில் வீடுகளை வெள்ளம் சூழ்ந்து தீவாக மாறியது. தண்ணீரை அகற்றக்கோரி எட்டயபுரம் ரோட்டில் பொதுமக்கள் நேற்று மறியலில் ஈடுபட்டனர். ராட்சத பாறை உருண்டது: நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே பாறை உருண்டு விழுந்ததில், பொன்னி (33) படுகாயம் அடைந்தார். தஞ்சை: கன்னியாகுமரி கடற்பகுதியில் காற்றழுத்தம் காரணமாக தமிழகத்தின் பல

இடங்களில் நேற்றும் கனமழை கொட்டித்தீர்த்தது. இலங்கை அருகே மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை மேற்கு நோக்கி நகர்ந்து கன்னியாகுமரி கடல் பகுதியில் நீடிக்கிறது. இதன்காரணமாக கடலோர மற்றும் உள்மாவட்டங்களில் நேற்றும் மழை கொட்டித்தீர்த்தது. தஞ்சையில் நேற்று அதிகாலை முதல் பலத்த மழை பெய்தது. பூதலூர் அருகே சோழகம்பட்டி காட்டாறில் ஏற்பட்ட அடைப்பால் ஊருக்குள் தண்ணீர் புகுந்தது. தகவல் அறிந்ததும் காட்டாற்றின் அடைப்புகளை அதிகாரிகள் சீரமைத்தனர். திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி, முத்துப்பேட்டை, நன்னிலம் ஆகிய பகுதிகளில் நேற்று காலை முதல் மழை பெய்தது. பிற்பகலில் கும்மிருட்டாக காணப்பட்டது. நாகை, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் லேசான மழை பெய்தது. தர்மபுரி , சேலத்தில் காலை 10 மணிக்கு தொடங்கிய சாரல் மழை மாலை வரை நீடித்தது. நாமக்கல் மாவட்டத்தில் ராசிபுரம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில் மழை நீடித்தது. வேலூரில் நேற்று நாள் முழுவதும் மழை பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் பல இடங்களில் வீடுகளை வெள்ளம் சூழ்ந்து தீவாக மாறியது. தண்ணீரை அகற்றக்கோரி எட்டயபுரம் ரோட்டில் பொதுமக்கள் நேற்று மறியலில் ஈடுபட்டனர். ராட்சத பாறை உருண்டது: நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே பாறை உருண்டு விழுந்ததில், பொன்னி (33) படுகாயம் அடைந்தார்.

**தமிழகத்தை மீண்டும் மிரட்டுகிறது கனமழை: இயல்பு நிலைக்கு திரும்ப முடியாமல் தவிக்கும் மக்கள்**



சென்னை: குமரி கடல் பகுதியில் நீடிக்கும் காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இலங்கையை ஒட்டி தென்மேற்கு வங்கக் கடலில் நிடிலகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து குமரி கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் நிலை

கொண்டுள்ளது. இந்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

கனமழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மாவட்டங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு, இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. விருதுநகர், திருவள்ளூர், பெரம்பலூர், அரியலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி வட்டத்திற்கு பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெற இருந்த சட்டக் கல்லூரி தேர்வு, சென்னை பல்கலைக்கழக தேர்வு, திருவள்ளூர் பல்கலைக்கழக தேர்வு, அண்ணா பல்கலைக்கழக தேர்வு மற்றும் புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழக தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. தேர்வு தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**தென் மாவட்டத்தில் கனமழை பெய்யும்**




சென்னை: இலங்கை அருகே நிலை கொண்டு இருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை வட மேற்கு திசையில் நகர்ந்து குமரிக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம்

தெரிவித்துள்ளது. கடந்த 2 வாரங்களாக வட கிழக்கு பருவமழை தமிழகத்தில் தொடர்ச்சியாக கொட்டித் தீர்த்தது இந்நிலையில், இலங்கை அருகே உருவான புதிய காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நேற்று முன்தினம் இரவு முதல் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று புதுக்கோட்டையில் 90 மிமீ மழை பெய்துள்ளது.

இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு திசையில் நகர்ந்து குமரிக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதனால் இரண்டு நாட்களுக்கு புதுச்சேரி மாநிலம் மற்றும் விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்யும். சென்னையில் சில இடங்களில் விட்டு விட்டு மழை பெய்யும். மழை காரணமாக விழுப்புரம், வேலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**இறக்குமதி வரி உயர்த்தப்படுமா? சீன கச்சாபட்டு இறக்குமதியால் பட்டுக்கூடு தொழிலுக்கு சிக்கல்**




கோவை: சீனாவில் இருந்து கச்சாபட்டு இறக்குமதியால் தமிழகத்தில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளுக்கு விலை கிடைப்பதில்லை. இறக்குமதி வரியை அதிகரிக்காவிட்டால் பட்டுக்கூடு தொழிலை கைவிட்டு, காய்கறி சாகுபடிக்கு மாற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு உள்ளது. தமிழகத்தில் கோவை

மாவட்டத்தில் 1,475 ஏக்கரிலும், திருப்பூர் மாவட்டம் உடுமலை பகுதியில் 3,500 ஏக்கர் பரப்பளவிலும் விவசாயிகள் வெண் பட்டுக்கூடுகளை வளர்த்து வருகின்றனர். தமிழகத்தில் வெண் பட்டுக்கூடு உற்பத்தியில் உடுமலை முன்னிலையில் உள்ளது. ஆனால் உடுமலையில் பட்டுக்கூடு விற்பனை நிலையம் இல்லை. கோவையில் பட்டுவளர்ச்சித்துறை அலுவலகத்தில் உள்ளது. இங்கு தினசரி பட்டுக்கூடு விற்பனை நடக்கிறது. காஞ்சிபுரத்தில் தினசரி பட்டுநூல் விலை நிர்ணயிக்கப்படுகிறது. பட்டுநூல் விலை ஏற்றத்தாழ்வால் பட்டுக்கூடுகளுக்கு நிலையான விலை கிடைப்பதில்லை. கடந்த ஆண்டு ஒரு கிலோ பட்டுக்கூடுக்கு 400 வரை விலை கிடைத்தது. இந்த ஆண்டு சராசரியாக 250 ஆக உள்ளது. விலை சரிவிற்கு சீனாவில் இருந்து பல ஆயிரம் மெட்ரிக் டன் கச்சாபட்டு இறக்குமதி செய்யப்படுவதால் இந்தியாவில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளுக்கு விலை உயரவில்லை. சீனாவில் இருந்து இறக்குமதியாகும் கச்சாபட்டிற்கு இறக்குமதி வரி அதிகரித்தால் பட்டுக்கூடுகளுக்கு விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து உடுமலை, கோவையை சேர்ந்த பட்டுக்கூடு உற்பத்தி விவசாயிகள் கூறுகையில், ''மத்திய, மாநில அரசுகளின் ஊக்குவிப்பின் பேரில் விவசாயத்திற்கு மாற்றாக மல்பெரி செடிகளை வளர்த்து, அதில் கூட்டுப்புழுக்களை வளர்த்து, பட்டுக்கூடு தயாரிப்பில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஆனால், பட்டுக்கூடுகளுக்கு கடந்த ஒரு ஆண்டாக விலை கிடைக்கவில்லை. உள்நாட்டில் வெண்பட்டுக்கூடுகளுக்கு விலை கிடைக்க, சீனாவில் இருந்து இறக்குமதியாகும் கச்சாபட்டிற்கு இறக்குமதி வரியை அதிகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் காய்கறி விவசாயத்திற்கு மாறுவதை தவிர வேறு வழியில்லை.' என்றனர்.

**ரூ.1.25 கோடிக்கு மஞ்சள் ஏலம்**



திருச்செங்கோடு: திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடந்த ஏலத்தில், 2,100 மூட்டை மஞ்சள் ரூ.1.25 கோடிக்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மஞ்சள் விற்பனைக்கு வந்தது. இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களில் இருந்து 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டனர். விரலி ரகம் குவிண்டாலுக்கு (100 கிலோ) ரூ.7,999 முதல் ரூ.10,967க்கும், கிழங்கு ரகம் ரூ.6,900 முதல் ரூ.9,888க்கும், பனங்காளி ரகம் ரூ.5,539 முதல் ரூ.17,719க்கும் விற்பனையானது. மொத்தம் 2,100 மூட்டை மஞ்சள் ரூ.1.25 கோடிக்கு விற்பனையானது.

**ஒரு கிலோ மல்லிகை ரூ.600**



வேலூர்: வேலூர் நேதாஜி பூ மார்க்கெட்டிற்கு வேலூர், திருவண்ணாமலை, மதுரையில் இருந்து பூக்கள் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. கடந்த சில நாட்களாக பெய்த மழையால் பூக்களின் விலை பலமடங்கு அதிகரித்துள்ளது. வேலூரில் நேற்று மல்லிகை, முல்லை ஆகிய பூக்கள் கிலோ ரூ.600க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல் கனகாம்பரம் பூ கிலோ ரூ.1000 வரை விற்பனையானது. நேற்று முன்தினம் மல்லி, முல்லை கிலோ ரூ.200க்கு விற்பனையானது. நேற்று ஒரே நாளில் பலமடங்கு விலை அதிகரித்துள்ளது. அதேபோல் கனகாம்பரம் நேற்று முன்தினம் ரூ.700க்கு விற்பனையானது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், ‘மழையின் காரணமாக, பூக்கள் விளைச்சல் பாதிப்படைந்து, விலையும் உயர்ந்துள்ளது. இந்நிலையில், மார்க்கெட்டுக்கு குறைந்த அளவு பூக்களே விற்பனைக்கு வந்தது. விற்பனை தொடங்கிய 2 மணி நேரத்தில் அனைத்து பூக்களும் விற்பனையாகிவிட்டது. மழை நீடித்தால், பூக்களின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது’ என்றனர்.

**மழையால் அறுவடை பாதிப்பு**

வாடிப்பட்டி. : வாடிப்பட்டி பகுதியில் முதல் போக நெல்சாகுபடி தற்போது அறுவடை பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.இந்நிலையில் கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் அடிக்கடி பெய்த மழையால் வயலில் மழைநீர் புகுந்து அறுவடை பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மழையால்

நெற்கதிர்கள் தரையில் சாய்ந்துள்ளன. மேலும் மழை நீடிக்கும் பட்சத்தில் தற்போது வயலில் சாய்ந்துள்ள நெற்கதிர்கள் முளைத்துவிடும் என்பதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

## 10 நாட்கள் தாமதமாக தண்ணீர் திறக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

வாடிப்பட்டி. : வைகை அணையிலிருந்து நெல் சாகுபடிக்காக நீரை 10 நாட்கள் தாமதமாக திறக்க வேண்டுமென விவசாய சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்வைகை அணையிலிருந்து நெல்சாகுபடிக்காக வரும் புதன் கிழமை தண்ணீர் திறக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில் பொதுப்பணித்துறைத் துறை நீர்வள ஆதார அமைப்பின் எம்டியு.23. பெரியாறு பிரதானக் கால்வாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தினர் விடுத்துள்ள கோரிக்கை.பேரணை முதல் கள்ளந்திரிவரை தற்போது அறுவடை பணி நடைபெறுகிறது. இந்த பணி மழையால் பாதிக்கப்பட்டு மிக அதிகமாக செலவு செய்து வயல்வெளியிலிருந்து களத்து மேட்டுக்கு நெற்பயிரை கொண்டுவருவதற்கு விவசாயிகள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். அறுவடை முடியாத நிலையில் தற்போது தண்ணீர் திறக்கப்பட்டால் ஏற்கனவே விவசாய பணிகளை தொடங்கியவர்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாவார்கள். அதனால் வைகை அணையிலிருந்து தற்போது தண்ணீர் திறப்பதை கைவிட்டு 10 நாட்கள் தாமதமாக திறக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விவசாயிகளின் நெல் மூடைகள் முதல் முறையாக ஏலம் மூலம் விற்பனை

மதுரை, : மதுரை மாவட்டத்தில் விவசாயிகளின் நெல்மூடைகள் முதல் முறையாக ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டது. மதுரை மாவட்டத்தில் பெரியாறு பாசனத்தில் இருபோகம், ஒரு போகம், மற்றும் நிலையூர், திருமங்கலம், உசிலம்பட்டி ஆகிய கால்வாய் மூலம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல் மூடைகளை அரசு நேரடியாக குறிப்பிட்ட சில மாதத்தில் கொள்முதல் செய்யும். பருவம் தவறிய மற்றும் கோடை காலத்திலும், விவசாயிகள் தங்கள் அறுவடை செய்த நெல்லை மதுரை மாட்டுத்தாவணியில் உள்ள நெல் கமிஷன் மண்டிக்கு அனுப்பி வைப்பார்கள். கமிஷன் கடை மூலம் விற்பனை நடைபெறும்.

கமிஷன் கடைக்கு நெல் மூடையை இறக்க, ஏற்றவும், மூடைக்கான தொகைக்கு 100க்கு ரூ.2 வீதம் கமிஷன் கொடுக்க வேண்டும். கமிஷன் கடைகள் மூலம் நெல்மூடைகளை அரிசி ஆலை வியாபாரிகள் வாங்கினர். சமீபத்தில் நெல் வியாபாரிகளுக்கும், கமிஷன் கடைகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இன்றைய நிலையில் நெல் விதை, உரம் வாங்கும் செலவு, விவசாய பணிக்கான செலவுக்கு ஏற்ப நெல் மூடைகளை கமிஷன் கடைக்காரர்கள் விலைக்கு வாங்குவது இல்லை. குறைந்த விலைக்கு மூடையை வாங்கி அதிக விலைக்கு வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வந்தனர். இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் விவசாயிகளின் நெல் மூடைகளை வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை மையம் மூலம் ஏலம் விட கலெக்டர் சுப்பிரமணியன் உத்தரவிட்டார். இதற்கான துவக்க விழா நேற்று நடந்தது.

இதில் குறைந்த அளவு மூடைகள் மட்டுமே ஏல த்திற்கு வைத்திருந்தனர். விவசாயிகள், அரிசி ஆலை, வியாபாரிகள் கலந்து கொண்டனர். வே ளாண்மை ஒழுங்குமுறை விற்பனை மைய செயலாளர் தவசுமுத்து முன்னிலையில் ஏலம் நடந்தது.

நெல் மூடைகளில் இரு ந்த நெல்லை வியாபாரிகள் மாதிரி எடுத்து பார்த்து விலையை நிர்ணயம் செய்து பேப்பரில் எழுதி பெட்டியில் போட்டனர். இதில் அதிக விலை கேட்ட வியாபாரிக்கு நெல் மூடைகள் விற்பனை செய்யப்பட்டது. உடனே அதே இடத்தில் விவசாயிக்கு பணம் வழங்கப்பட்டது.

இது குறித்து செயலாளர் தவசு முத்து கூறுகையில்,“ 65 கிலோ கொண்டது ஒரு மூடையாகும். ஏலத்தால் விவசாயிகள் தரகுக்கான கமிஷன் கொடுக்க தேவையில்லை. தினமும் காலை 10 மணி முதல் ஏலம் நடைபெறும். வரும் அறுவடை காலத்தில் 50 ஆயிரம் மெட்ரிக் டன் வரை ஏலம் நடைபெறும் என எதிர்பார்க்கிறோம். அரசு விடுமுறை நாளில் மட்டும் ஏலம் நடைபெறாது. இதில் ஏதேனும் நடைமுறை சிக்கல் இருந்தால் அதனையும் போகப்போக தீர்த்து வைக்கப்படும்,”என்றார்.

**நாமக்கல் மண்டலத்தில் தினமும் 40 லட்சம் முட்டை உற்பத்தி சரிவு**




நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் 5 கோடி முட்டையின கோழிகள் வளர்க்கப்படுகிறது. தினமும் 3.50 கோடி முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. கோழித்தீவனத்தில் முக்கிய மூலப்பொருளாக மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது. ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து தான் மக்காச்சோளம் அதிக அளவில் நாமக்கல் பண்ணைகளுக்கு வருகிறது. தற்போது, அம்மாநிலங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், மக்காச்சோளத்தை உலர வைக்க முடியவில்லை. இதனால், தரம் குறைந்த மக்காச்சோளமே பண்ணையாளர்களுக்கு கிடைக்கிறது. இதனால் நாமக்கல் பகுதியில் உள்ள பண்ணைகளில் 10 முதல் 15 சதவீதம் வரை முட்டை உற்பத்தி குறைந்துவிட்டது. இதுகுறித்து தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்பிரமணியம் கூறுகையில், ''புதிய மக்காசோளம் வரத்து குறைவாக உள்ளது. இதனால் முட்டை உற்பத்தி குறைகிறது. ஒரு பண்ணையில் 1,000 கோழிகள் இருந்தால் சராசரியாக தினமும் 900 முட்டை கிடைக்கும். இது 700 ஆக குறைந்துவிட்டது. இதனால், முட்டை உற்பத்தி தினமும் 40 லட்சம் என்ற அளவுக்கு குறைந்துள்ளது'' என்றார்.

தின பூமி

**தமிழகத்தில் 24 மணி நேரத்திற்கு கன மழை எச்சரிக்கை**



சென்னை: தமிழகத்தில் பரவலாக பல பகுதிகளிலும் நல்ல மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் கன மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.தென் மேற்கு வங்கக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளதால் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நேற்று மழை பெய்தது.

இந்த மழை 24 மணி நேரம் நீடிக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சமீபத்தில்தான் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக கடலூர் பெரும் வெள்ளக்காடானது. அதேபோல சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களும் பெரும் பாதிப்பை சந்தித்தன. சென்னையின் புறநகரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.சென்னையைச் சுற்றியுள்ள அத்தனை ஏரிகளும் நிரம்பி வழிகின்றன. இந்நிலையில் தென் மேற்கு வங்கக்கடலில் இலங்கைக்கு அருகே புதிய காற்றழுத்த தாழ்வு நிலை மையம் கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தில் இன்றும் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. விட்டு விட்டு மழை சென்னையில் காலை முதலே விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.சிறிய தூறலாகவும், சற்று பெரிய மழையாகவும் இது தொடர்கிறது. வானம் தொடர்ந்து மேகமூட்டாகவும் உள்ளது. விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூரில் விடிய விடிய கனமழை கொட்டித் தீர்த்தது.

இந்தக் கனமழை காரணமாக செண்பகத்தோப்பு சுற்றுலா பகுதிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோல காவிரி டெல்டாவில் தஞ்சாவூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கனமழை பெய்தது. வைகை வெள்ளப் பெருக்கு தேனி மாவட்டம் வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கன மழை காரணமாக வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மதுரை, ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலும் மழை கொட்டி வருகிறது.தமிழகம் முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விபரம் வருமாறு:–

புதுக்கோட்டை இலுப்பூரில் 9 செ.மீ., கடலாடி, பாண்டிச்சேரி 7 செ.மீ.,ஆர்.எஸ்.மங்களம், ராமநாதபுரம் 6 செ.மீ., சோழவரம் 5 செ.மீ., மன்னார்குடி, குடவாசல், விழுப்புரம், அம்பாசமுத்திரம், ரெட்ஹில்ஸ், சிதம்பரம், கமுதி 4 செ.மீ., திருத்துறைப்பூண்டி, புதுக்கோட்டை, ஆடுதுறை, மணிமுத்தாறு, தாமரைப்பாக்கம், நாகப்பட்டினம், கடலூர், நிலக்கோட்டை, கும்பகோணம், திருவிடைமருதூர், பாண்டவையாறு, தொண்டி, காவேரிப்பாக்கம், அதிராம்பட்டினம், மதுக்கூர், திருவாரூர், பூந்தமல்லி, திருவாடானை 3 செ.மீ., நன்னிலம், நுங்கம்பாக்கம், ஸ்ரீபெரும்புதுர், செம்பரம்பாக்கம், முத்துப்பேட்டை, மேலூர், புழல், கொள்ளிடம், மரக்காணம், பரங்கிப்பேட்டை, மணியாச்சி, தம்மம்பட்டி, குன்னூர், வலங்கைமான், வந்தவாசி, பேராவூரணி 1 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

குமரிக்கடல் அருகே காற்றழுத்த தாழ்வு நிலை: 2 நாட்களுக்கு மழை நீடிக்கும்- 11 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை



தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை காலத்தில் சராசரியாக 44 செ.மீ. மழை பெய்யும். ஆனால், இந்த ஆண்டு இதுவரை மட்டுமே 43 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. தொடர் மழையால் கடலோர மாவட் டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்,வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரண மாக தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மேலும் 2 நாட்களுக்கு மழை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:

இலங்கையை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை, ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி, குமரிக்கடல் பகுதியில் நீடிக்கிறது. இதன்காரணமாக, கடந்த 24 மணி நேரத்தில் தமிழக கடலோர மாவட்டங்களில் பெரும் பாலான இடங்களிலும், உள்மாவட் டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்துள்ளது.

கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களிலும் 2 நாட்களுக்கு தொடர்ந்து மழை பெய்யும். கடலோர மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை அல்லது மிக கனமழை பெய்யக் கூடும். உள்மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப் புள்ளது.

சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். விட்டுவிட்டு மழை பெய்யும். சில நேரங்களில் கனமழைக்கும் வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

காற்றழுத்த தாழ்வு நிலையால் நேற்று முன்தினம் இரவு முதல் சென்னை, காஞ்சிபுரம், கடலூர் உள்ளிட்ட பல மாவட் டங்களில் மிதமானது முதல் கன மழை வரை பெய்து வருகிறது. சென்னையில் விட்டுவிட்டு அவ் வப்போது மழை பெய்தது.

தொடர் மழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், நாகை, திருவாரூர், வேலூர், திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடு முறை விடப்படுவதாக மாவட்ட ஆட்சியர்கள் அறிவித்தனர். திரு வள்ளூர், அரியலூர், பெரம் பலூர் மாவட்டங்களில் பள்ளிக ளுக்கு மட்டும் விடுமுறை விடப் பட்டுள்ளது. இதேபோல புதுச்சேரி, காரைக்காலிலும் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.

அண்ணா பல்கலை. உறுப்பு கல்லூரிகளில் இன்று தொடங்கி 28-ம் தேதி வரை நடக்கவிருந்த செமஸ்டர் தேர்வுகள் ஒத்திவைக் கப்பட்டுள்ளன. மறுதேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று பதிவாளர் எஸ்.கணேசன் தெரிவித்தார். சென்னை பல்கலை. தேர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன._

திண்டுக்கல் மாவட்டத்தில் 5 மணி நேரம் விடாமல் கொட்டிய மழை_: கொடைக்கானல் மலைப்பாதையில் மண்சரிவால் போக்குவரத்து பாதிப்பு_



திண்டுக்கல் மாவட்டத்தில் 5 மணி நேரம் தொடர்ந்து பரவலாக மழை கொட்டியது. மேலும் கொடைக்கானலில் மண்சரிவு ஏற்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மிதமான மழையே அவ்வப்போது பெய்துவந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் மாவட்டம் முழுவதிலும் பரவலாக லேசான மழைப் பொழிவு தொடங்கியது.

திண்டுக்கல்லில் நேற்று காலை 7.30 மணிக்கு தொடங்கிய மழை ஒரே சீராக பகல் 12.45 மணி வரை தொடர்ந்தது. இதனால் நகரின் சாலைகள், தெருக்களில் மழைநீர் வெள்ளம் பெருக்கெடுத்தது.

14-வது வார்டு கோபால்நகர் மற்றும் 30-வது வார்டு திருமலைசாமிபுரம், ரயிலடி தெரு, இந்திராநகர் பகுதிகளில் மழை நீர் வெளியேற வடிகால் வசதியில்லாததால் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது.

திண்டுக்கல் அருகேயுள்ள சிறுமலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு தொடங்கிய மழை நேற்று மாலை வரை தொடர்ந்து பெய்தது. வேடசந்தூர் அருகே கிழக்கு மாத்தினிப்பட்டியில் வீடு மீது மரம் விழுந்ததில் மதுமிதா (10) என்ற சிறுமி காயமடைந்தார்.

கள்ளிமந்தயம் அருகே திருவாண்ட புரத்தில் மின்கம்பம் நடும் பணியில் ஈடுபட்ட கோட்டத்துரையைச் சேர்ந்த தொழிலாளி காமராஜ்(35) மின்சாரம் பாய்ந்ததில் பலியானார். உடன் பணிபுரிந்த முருகன், செல்வக்குமார் ஆகியோர் காயமடைந்தனர். இதுபற்றி கள்ளிமந்தயம் போலீஸார் விசாரித்தன்றனர்.

பழநியில் நேற்று பெய்த மழையால் பகல் 12 மணி முதல் ரோப்கார் சேவை 2 மணி நேரம் நிறுத்தப்பட்டது. மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு ரோப்கார் தொடர்ந்து இயக்கப்பட்டன.

கொடைக்கானலில் இருந்து வில்பட்டி செல்லும் சாலையில் மண்சரிவு ஏற்பட்டது. இதனால் மலைக்கிராமங்களுக்கு செல்ல முடியாமல் மக்கள் சிரமப்பட்டனர். ஒரு மணி நேரத்தில் மண் அகற்றப்பட்டு போக்குவரத்து சீரானது. கொடைக் கானலில் இருந்து வத்தலகுண்டு செல்லும் சாலையில் வாழைகிரி அருகே சாலையின் குறுக்கே மரம் விழுந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மலைக்கிராம சாலைகளில் ஆங் காங்கே சிறிய அளவிலான மண்சரிவுகள் ஏற்பட்டதை நெடுஞ்சாலைத் துறையின ரும், பேரிடர் மீட்புக் குழுவினரும் உடனடியாக ஜே.சி.பி. இயந்திரத்துடன் சென்று சீரமைப்பு பணியை மேற்கொண்டனர்.

## சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரியிலும் உபரி நீர் திறப்பு: வெள்ள அபாய எச்சரிக்கை



மழையின் தீவிரத்தால் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சென்னைக்கு குடி நீர் தரும் முக்கிய ஏரிகள் முழு கொள்ளளவை எட்டின. இதனால், செம்பரம்பாக்கம், பூண்டி ஏரிகளிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று மாலை நிலவரப்படி 21.20 அடி உயரம் கொண்ட புழல் ஏரியின் நீர் மட்டம் 19 அடியாக உயர்ந்தது. வினாடிக்கு 513 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. ஏரியின் பாதுகாப்பு கருதி நேற்று இரவு முதல் உபரி நீர் திறக்கப்பட்டது. துவக்கத்தில், வினாடிக்கு 250 கன அடியாக திறக்கப்பட்ட நீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வினாடிக்கு 500 கன அடி நீரை வெளியேற்றி வருகின்றனர்.

**எண்ணூர் முகத்துவாரம்** இந்த உபரி நீர் வெளியேற்றத்தால் கடலில் கலக்கும் எண்ணூர் முகத்துவாரப் பகுதி வரை, கால்வாய் கரையோரம் உள்ள பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் வளர்ச்சிக்கு நதிகளை இணைப்பது அவசியம்: ஆளுநர் ரோசய்யா வலியுறுத்தல்



‘தேசிய நீர்வழிப் பாதைகள் மூலம் நதிநீர் இணைப்பு’ எனும் தலைப்பிலான 2 நாள் மாநாடு சென்னை விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. நிறைவு நாளான நேற்று ஆளுநர் கே.ரோசய்யா கலந்து கொண்டு மாநாட்டில் பங்கேற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கினார். உடன் விஐடி பல்கலை. வேந்தர் ஜி.விசுவநாதன், ‘நவாட் டெக்’ அமைப்பின் தலைவர் ஏ.சி.காமராஜ், விஐடி பல்கலை. துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன், உதவி துணைத் தலைவர் காதம்பரி விசுவநாதன். படம்: க.ஸ்ரீபரத்

**நாட்டின் வளர்ச்சிக்கு நதிகளை இணைப்பது அவசியமானது என்று தமிழக ஆளுநர் கே.ரோசய்யா தெரிவித்தார்.**

சென்னை வண்டலூரை அடுத் துள்ள விஐடி பல்கலைக்கழகத்தில், ‘நீர்வழிப் பாதைகளின் மூலம் நதிநீர் இணைப்பு’ என்ற தலைப்பில் 2 நாள் மாநாடு நேற்று முன்தினம் தொடங்கியது. மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சி நேற்று நடந்தது. நதிநீர் இணைப்பு தொடர்பான தொழில்நுட்ப அமர்வில், தமிழக நீர் தொழில்நுட்ப மைய இயக்கு நர் பி.ஜே.பாண்டியன், முன்னாள் அரசு செயலர் என்.ஆர்.கிருஷ் ணன், நேஷனல் அக்ரோஃபார்ம்ஸ் இயக்குநர் எஸ்.வி.முருகன், தமிழ்நாடு தேசிய விவசாயிகள் சங்க தலைவர் பொன்னுசாமி, பாஜக மூத்த தலைவர் இல.கணேசன், தமாகா துணைத் தலைவர் பி.எஸ்.ஞானதேசிகன் உள்ளிட்டோர் பேசினர்.

விவசாயிகள் சங்க பிரதிநிதி பொன்னுசாமி பேசும்போது, ‘‘பிளாஸ்டிக் பெருக்கத்தால் நிலத்தடி நீர் குறைகிறது. இருக்கிற நீரை பாதுகாக்க பிளாஸ்டிக்கை ஒழிக்க வேண் டும்’’ என்றார். தமிழக நீர் தொழில்நுட்ப மைய இயக்குநர் பி.ஜே.பாண்டியன் பேசும்போது, ‘‘தமிழகம் நீர் பற்றாக்குறையுள்ள மாநிலமாக உள்ளது. ஒரு கிலோ நெல்லை அறுவடை செய்ய 3 ஆயிரம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இது வருங்காலத்தில் இன்னும் அதிகரிக்கும்’’ என்றார்.

மாநாட்டில் பங்கேற்றோருக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கி ஆளுநர் கே.ரோசய்யா பேசியதாவது:

நதிகள் இணைப்பு தொடர்பாக மாநாடு நடத்தப்படுவது பாராட்டுக் குரியது. நாட்டின் வளர்ச்சிக்கு நதிநீர் இணைப்பு என்பது மிகவும் அவசியமானது.

அதனால், நாட்டின் பொருளாதார வலிமை பெருகும், விவசாயம் மற்றும் தொழில்வளம் பெருகும். விவசாயம் செழிப்ப தோடு, நிலத்தடி நீர்வளமும் பெருகும்.

மழைநீரை சேமிக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். அதை அனைவரும் பின்பற்ற வேண்டும். 2050-ல் இந்தியாவின் மக்கள்தொகை 150 முதல் 180 கோடியாக உயரக் கூடும். அப்போது 450 மில்லியன் டன் உணவுத்தேவை இருக்கும். இதற்கு 160 மில்லியன் ஹெக்டேரில் விவசாயம் செய்வது அவசியம் என்று தேசிய நீர் மேம்பாட்டு ஆணையம் கூறியுள்ளது. மாநிலங்களுக்குள்ளான நதி களை இணைப்பதற்கான 46 பரிந் துரைகளை அந்த ஆணையம் பெற்றுள்ளது. கடந்த மார்ச் நிலவரப்படி 35 பரிந்துரைகளுக் கான அறிக்கை தயார் நிலையில் உள்ளது. மகாராஷ்டிரம், தமிழ கம், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங் களில் நதிகளை இணைக்க விரிவான அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது மகிழ்ச்சி யான விஷயம். நதிகள் இணைப்புக்கான சிறப்புக்குழுவின் 5-வது கூட்டத்தில் நதிநீர் இணைப்பை தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது. நதிகள் இணைந்தால் அனைத்து மாநிலங் களும் பயனடையும். இவ்வாறு ஆளுநர் பேசினார். ‘‘நீர்வழிப் பாதைகளை இணைப் பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும். நம்மிடம் உள்ள ஆறு, குளம், ஏரி, கால்வாய்களை பாதுகாக்க நாமே முன்வர வேண் டும்’’ என்று விஐடி பல்கலைக் கழக வேந்தர் ஜி.விசுவ நாதன் கேட்டுக் கொண்டார்.

நதிநீர் இணைப்புக்காக முன்பு உருவாக்கப்பட்ட திட்டங்களில் குறைகள் இருந்தன. ஆனால், நீர்வழிப்பாதைகள் மூலம் நதிகளை இணைப்பதால், செலவு குறையும். விவசாயம், தொழில் வளம், வேலைவாய்ப்பு, மின்உற்பத்தி பெருகும்’’ என்று ‘நவாட் டெக்’ நிறுவனத் தலைவர் ஏ.சி.காமராஜ் கூறினார்.

பொள்ளாச்சி ஆனைமலையில் மாற்றுப் பயிருக்கு தயாராகும் நெல் விவசாயிகள்



▲ நெல் சாகுபடி செய்யப்பட்ட வயல்வெளிகளில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள இஞ்சி.
படம்:எஸ்.கோபு

பொள்ளாச்சி ஆனைமலையில், நெல் வயல்கள் தற்போது மாற்றுப் பயிர் சாகுபடிக்கு தயார்படுத்தப்படுகின்றன. இதனால், பாரம்பரியமிக்க ஆனைமலை கரவெளி தன்னுடைய பெருமையை இழந்து வருகிறது.

ஆழியாறு ஆற்று நீரினை, பழமைமிக்க 5 ஆயக்கட்டு வாய்க்கால்கள் மூலம் வயல்களில் பாய்ச்சி, குறுவை, சம்பா, தளாடி என முப்போகம் விளைவித்த ஆனைமலை கரவெளியின் நெல் சாகுபடி நடந்த வயல்வெளிகள், தற்போது மாற்று பயிர்களுக்கு தயார்படுத்தப்படுகின்றன.

வடக்கலூர் அம்மன் வாய்க்கால் வயல் பகுதியில் கடந்த சில போகங்களாக நெல் சாகுபடியில் போதிய வருவாய் இல்லாமல் இருந்த விவசாயிகள், மாற்றுப்பயிராக இஞ்சியை தேர்ந்தெடுத்து பயிர் செய்துள்ளனர்.

இது குறித்து நெல் விவசாயி பட்டீஸ்வரன் கூறும்போது, ஆனைமலை பகுதியில் தற்போது நெல் விவசாயம் படிப்படியாக குறைந்து வருகிறது. 6,400 ஹெக்டர் பரப்பளவில் நடந்த நெல் சாகுபடி தற்பொது 1,100 ஹெக்டர் பரப்பளவுக்கு குறுகிவிட்டது. நிரந்தர கொள்முதல் நிலையம் மட்டும் அரசு ஏற்படுத்தி கொடுத்தால் போதாது நெல்லுக்கு உரிய விலை கிடைக்க

நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் விவசாயிகள் மாற்றுப்பயிருக்கு மாறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்' என்றார்.

ஆனைமலை உதவி வேளாண் இயக்குநர் எம்.சிவக்குமார் கூறும்போது, 'நெல்லில் சராசரியான மகசூல் கிடைத்தாலும், வேலையாட்கள் பற்றாக்குறை, இடுபொருட்களின் விலை உயர்வு போன்றவற்றால் இழப்பு ஏற்படுவதாகக் கூறுகின்றனர். பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் நஷ்டம் போன்றவற்றால் நெல் பயிரிடும் பரப்பு குறைந்து வருகிறது' என்றார்.

ஆனைமலை தோட்டக்கலைத்துறை அலுவலர் ஆர்.வசுமதி கூறும்போது, 'கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,500 மீட்டர் உயரம் வரையுள்ள ஈரப்பதமுள்ள உஷ்ண மண்டலப் பகுதிகளில், நல்ல வடிகால் வசதியுள்ள, களிமண் கலந்த மண்ணில் நன்கு வளரும் தன்மையுடையது மலைப்பயிர் இஞ்சி. ஆண்டு முழுவதும் தேவையுள்ள பொருள் என்பதால் அதன் விற்பனையில் பிரச்சினை இருக்காது. தற்போதுள்ள நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சமவெளிப் பகுதியில் இஞ்சி சாகுபடி நடந்து வருகிறது. இஞ்சியை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக விற்பனை செய்தால் கூடுதல் லாபம் பெறலாம்' என்றார்.

சாகுபடிமுறை பற்றி விவசாயி கே.சி.சரவணன் கூறும்போது, 'இஞ்சி சாகுபடியில் இருவகை உள்ளது. பச்சை இஞ்சியாக விற்பனை செய்ய, விதைத்த 6-வது மாதம் முதல் அறுவடை செய்வது ஒரு வகை. 10 மாதம் விளைந்த இஞ்சியை அறுவடை செய்து சுக்காக தயாரித்து விற்பனை செய்வது இரண்டாவது வகை. சராசரியாக ஒரு ஏக்கருக்கு 60 கிலோ எடை கொண்ட 150 மூட்டை கிடைக்கிறது. சந்தையில் ஆண்டு சராசரி விலை ஒரு கிலோ ரூ.30 ஆகும். இதுவே சுக்கா மாற்றி விற்கும்போது கிலோ ரூ.180 வரை விற்பனையாகிறது' என்றார்.

பருவத்தே 'உயிர்' தா!



இந்தியாவில் கடந்த 15 ஆண்டுகளில் ஐந்து முறை வறட்சி ஏற்பட்டிருக்கிறது. மும்பையில் 2005-ம் ஆண்டில் ஒரே நாளில் 994 மில்லி மீட்டர் மழை பெய்தது. நாட்டில் இதுவரை பதிவான மழை அளவுகளிலேயே மிகவும் அதிகமானது இது என்று கூறப்படுகிறது. அதையொட்டி, ஐந்தாயிரம் பேர் பலியானார்கள்.

2010-ம் ஆண்டில் ஜம்மு - காஷ்மீர் மாநிலம் லே பகுதியில், 30 நிமிடங்களில் 150 முதல் 250 மில்லி மீட்டர் மழை பதிவானது.

2013-ம் ஆண்டில் உத்தராகண்ட் மாநிலத்தில், ஒரே நாளில் 340 மில்லி மீட்டர் மழை பதிவானது. இதில் 5,700 பேர் பலியானார்கள்.

2014-ம் ஆண்டில் ஜம்மு காஷ்மீரில் ஒரே நாளில் 200 மில்லி மீட்டர் மழை பதிவானது. அங்கு ஒரு மாதத்தில் பெய்கிற சராசரி மழை அளவைவிட இது 400 சதவீதம் அதிகம் என்று கூறப்படுகிறது.

**என்ன காரணம்?**

இதற்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக் கிறீர்கள்? சந்தேகமே இல்லாமல் பருவநிலை மாற்றம்தான்! ஏதோ ஓர் இடத்தில் பெய்கிற மழை அளவைக் கொண்டு மட்டும் விஞ்ஞானிகள் இதைக் கூறவில்லை. இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுவது ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில், சமீபகாலமாக அதிகரித்துவருகிறது. மேலும் ஒரு நிகழ்வுக்கும் அடுத்த நிகழ்வுக்கும் இடையிலான காலமும் குறைந்துகொண்டே வருகிறது. அதன் அடிப்படையிலேயே இந்த மழை அளவு மாறுபாடுகளுக்குப் பருவநிலை மாற்றம் எனும் பிரச்சினையே காரணம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையால் விவசாயம் பாதிக்கப்படும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால், அதை பணரீதியாகக் கணக்கிடும்போதுதான், அது ஒரு மாபெரும் பொருளாதாரப் பிரச்சினை என்பது புரிய வரும்.

**எவ்வளவு இழப்பு?**

தேசிய அளவில் பருவநிலை மாற்றத்தால் விவசாயத்தில் இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்து டெல்லியில் உள்ள அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (சி.எஸ்.இ.), ஆய்வு செய்தது. அதன்படி, இந்த ஆண்டு பிப்ரவரி முதல் ஏப்ரல் மாதம்வரை நாடு முழுக்க ஒரு கோடியே 82 லட்சம் ஹெக்டேர் நிலப்பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதை அப்படியே பொருளாதார ரீதியாகக் கணக்கிட்டால் சுமார் ரூ.20,453 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு மாறுபடும் மழை அளவுகளால் தனக்கு ஏற்படும் இழப்பை அரசு தரும் இழப்பீடு, வேளாண் காப்பீடு மற்றும் வங்கி, தனியார் கடன் ஆகிய வழிகளில் ஒரு விவசாயி சரிகட்டுகிறார்.

"ஆனால் இங்குதான் பிரச்சினையே. இழப்பீடு, காப்பீடு, கடன் என எந்த வழியிலும் ஒரு விவசாயிக்கு நியாயமான தீர்வு கிடைப்பதில்லை என்பதுதான் நிதர்சனம்" என்கிறார் சி.எஸ்.இ. ஆய்வாளர் அர்ஜுனா ॱ நிதி.

**இழப்பீட்டு அரசியல்**

அரசு இழப்பீடு மாநிலத்துக்கு மாநிலம் வேறு வேறாக, ஏற்ற இறக்கங்களோடு இருக்கும். டெல்லியில் ஒரு ஏக்கர் பாதிப்புக்கு ஒரு விவசாயிக்குக் கிடைக்கும் இழப்பீடு அதிகமாக இருக்கும். ஆனால், உத்தரப் பிரதேசத்தில் ஒரு ஏக்கர் பாதிப்புக்கு ஒரு விவசாயிக்குக் கிடைக்கும் இழப்பீடு மிக மிகக் குறைந்த அளவாகவே இருக்கும்.

"அரசு தரும் இழப்பீடு என்பது ஒவ்வொரு மாநிலத்திலும் ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகளின் தனிப்பட்ட முடிவைச் சார்ந்தது. அது மட்டுமல்லாமல், தனது நிலத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஒரு விவசாயி அளவிடுவதற்கும் மாவட்ட - மாநில - தேசிய அளவில் அரசு அந்த இழப்பை அளவிடுவதற்கும் நிறைய வேறுபாடுகள் நிலவுகின்றன. இது மட்டுமல்லாமல் லஞ்சம், கால தாமதம் ஆகியவற்றாலும் ஒரு விவசாயிக்கு நியாயமான முறையில் இழப்பீடு கிடைப்பதில்லை" என்கிறார் அர்ஜுனா.

**விழிப்புணர்வற்ற விவசாயிகள்**

அரசு தரும் இழப்பீடு அரசியல் சார்ந்தது என்றால், வேளாண் காப்பீடுகள் முற்றிலும் விழிப்புணர்வு சார்ந்தவை. நம் நாட்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பருவம் சார்ந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டம் என மூன்று வகை காப்பீட்டு திட்டங்கள் உள்ளன. இந்தத் திட்டங்களால் பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை, வெறும் 19 சதவீதம் மட்டுமே! அவர்களும்கூட ஒரு முறை மட்டுமே காப்பீடு செய்தவர்கள்.

"சுமார் 11 சதவீதம் விவசாயிகள் காப்பீட்டு பிரீமியம் தொகை கட்டக்கூட முடியாத சூழ்நிலையில் உள்ளனர். 24 சதவீதம் பேரிடம் காப்பீட்டு திட்டங்களில் இணைவதற்குத் தேவையான நிலப் பட்டா உள்ளிட்ட ஆவணங்கள் இல்லை. மீதம் உள்ள 46 சதவீதம் பேர் இந்தத் திட்டங்களில் இணைந்துகொள்ள ஆர்வம் இல்லாமல் இருக்கிறார்கள். அதற்கு முக்கியக் காரணம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 72 மணி நேரத்துக்குள் காப்பீட்டு நிறுவனத்துக்குத் தகவல் அளிக்க வேண்டும் என்பன போன்ற விதிமுறைகளை, யதார்த்தத்தில் கடைப்பிடிக்கச் சிரமமாக இருப்பதால்தான்" என்கிறார் அர்ஜுனா.

**கடன் வெள்ளம்**

அடுத்ததாக, வங்கி மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் ஆகியோரிடம் வெள்ளத்திலிருந்து தப்பிக்கக் கடன் வாங்கினால், அந்தக் 'கடன் வெள்ள'த்தில் பிறகு எப்படித் தப்பிப்பது என்பது யாருக்குமே தெரியாத புதிர். நாட்டில் 43 சதவீத விவசாயிகள் வங்கியை நம்பியிருக்க, அடுத்தபடியாக 26 சதவீதம் பேர் தனியார் நிதி ஏற்பாட்டாளர்களைத்தான் நம்பியிருக்கின்றனர். மீதமுள்ள 31 சதவீதம் பேர் மட்டுமே உறவினர்கள், இதர வழிகளில் கடன் பெறுகின்றனர்.

இப்படிக் கடன்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை தமிழகத்தில் 82.5 சதவீதமாக உள்ளது. இதனால் தேசிய அளவில் அதிகக் கடன்பட்ட விவசாயிகள் உள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

**விடுதலை எங்கே?**

இந்தப் பிரச்சினைகளிலிருந்து விவசாயிகளை எப்படி விடுவிப்பது?

“விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பீடுகளைக் கணக்கிடுவதில், பயிர் இழப்பை அளவிடுவதில்தான் அதிகப் பிரச்சினைகள் நிலவுகின்றன. இதன் காரணமாகத் தற்போது இஸ்ரோ அமைப்பின் உதவியோடு ஹரியாணா, கர்நாடகம், மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு மாவட்டத்தில் பரிசோதனைரீதியாக, செயற்கைக்கோள் மூலம் பயிர் விளைச்சல் மற்றும் பயிர் இழப்பு ஆகியவற்றைக் கணக்கிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது கடந்த மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த முயற்சி வெற்றியடையும் பட்சத்தில் இதர மாநிலங்களிலும் இதைச் செயல்படுத்தலாம். மற்றபடி தாமதமோ அல்லது லஞ்சமோ இல்லாமல் இழப்பீடு, காப்பீடு ஆகியவற்றை அரசு சரியான நேரத்தில் வழங்கினாலே மீண்டும் கலப்பையைப் பிடிக்கும் தெம்பு விவசாயிகளுக்கு வந்துவிடும்” என்கிறார் அர்ஜுனா.

## வெள்ளம்: பயிர்களை எப்படி காப்பாற்றுவது?



ஆண்டுதோறும் பெய்யும் மழையில் 40 சதவீதத்துக்கு மேல் கடலில் கலக்கும், 35 சதவீதம் வெயிலில் ஆவியாகும், 14 சதவீதம் மண்ணால் உறிஞ்சப்படும், 10 சதவீதம் மண்ணின் ஈரப்பதத்துக்கு உதவும் என்கின்றனர் நிபுணர்கள். கடந்த 2005-ம் ஆண்டு பெய்த மழையின் அளவைவிட, தற்போது பெய்திருக்கும் மழையின் அளவு குறைவாக இருந்தாலும் அன்றைக்கு ஆனதைவிட அதிக சேதத்தை பயிர்கள் சந்தித்து இருப்பதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

விவசாயிகள் எத்தகைய முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் வெள்ளத்திலிருந்து பயிர்களை பாதுகாக்கலாம் என்று பகிர்ந்துகொண்டார் முன்னோடி இயற்கை விவசாயியும், புளியங்குடி விவசாய சேவா நிலைய செயலருமான கோமதிநாயகம்:

**நீர் வழிப்பாதைகள் மீட்பு**

ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தற்போது பெய்ததைவிட அதிகமாக மழை பெய்திருக்கிறது. அப்போதெல்லாம் இதுபோன்ற பயிர்ச் சேதம் ஏற்பட்டதில்லை. அதற்குக் காரணம், அந்தக் காலத்தில் ஆறுகளை ஒட்டி நீர்வழிப் பாதைகள் (உபரிநீர் கால்வாய்கள்) இருந்தன. அவற்றின் வழியாக ஆற்று வெள்ளம் வடிந்துவிடும். ஆனால், இன்றைக்கு அத்தகைய நீர்வழிப் பாதைகளை காணமுடிவதில்லை. மறைந்துபோன நீர்வழிப் பாதைகளை, மீண்டும் ஆறுகளை ஒட்டி உண்டாக்க வேண்டும்.

**மணல்வாரியின் பயன்**

கரையை உடைக்காமல் தண்ணீரை வெளியேற்றும் வகையில், மதகைப் போன்று தண்ணீரைக் கட்டுப்படுத்தும் அமைப்பு மணல்வாரி. இதன் பயன்பாட்டை நாம் மறந்துவிட்டோம். இந்த மணல்வாரி, அணையின் கரையை உடைக்காமல் உபரி நீரை பாதுகாப்புடன் வெளியேற்றும் அமைப்பு. இவற்றை மீண்டும் உருவாக்க வேண்டும். அப்படிக் கொண்டுவந்தால், வெள்ளத்திலிருந்து பயிர்கள் கணிசமாகக் காப்பாற்றப்படும்.

**விதைத் தேர்வு முக்கியம்**

மாதம் மும்மாரி பெய்த காலத்தில் அதற்கேற்ப விதை நெல்லைத் தேர்ந்தெடுத்து விவசாயம் செய்தவர்கள் நம் முன்னோர். நம்முடைய பாரம்பரிய விதை நெல் ரகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்துக்கு சிறப்பான விளைச்சலை கொடுக்கக்கூடியவை. உதாரணத்துக்கு மடுமுழுங்கி எனப்படும் விதை நெல், வெள்ளத்தில் மூழ்கினாலும் விளைச்சலுக்குக் குறைவிருக்காது. புழுதிவிரட்டி என்னும் நெல் ரகம், கடும் வறட்சியிலும் காற்றிலிருக்கும் ஈரப்பதத்தைக் கொண்டே 40 நாட்களுக்கு சமாளித்து வளரும்.

இதுபோன்ற பல சிறப்புகள் நம்முடைய பாரம்பரிய விதை நெல்களுக்கே இருக்கின்றன. எனவே, விவசாயிகள் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்ற இயற்கை

இடர்களைச் சமாளிக்க முடியாத ரகங்களை மட்டுமே நம்பியிருக்கக் கூடாது. எல்லா இடங்களிலும் பாரம்பரிய விதை வங்கிகளையும் உருவாக்க வேண்டும்.

**மணல் பாதுகாப்பு அவசியம்**

கடந்த 10 ஆண்டுகளில்தான் வெள்ளத்தால் பயிர்கள் சேதமாவது அதிகம் நடக்கிறது. ஆற்று மணலை அதிகம் பயன்படுத்த ஆரம்பித்ததும் இந்த காலகட்டத்தில்தான். வடிகட்டியாகவும், நீரை உறிஞ்சி சேமிக்கவும் என இரண்டு வழிகளில் நமக்கு பலன் அளிக்கும் மணலைப் பாதுகாப்பது அவசியம். மணலைப் பாதுகாக்காவிட்டால், சாதாரண மழையும் பெருவெள்ளச் சேதத்தை உண்டாக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது. இது மிக முக்கியமானது.

விகடன்

**தமிழகத்தில் கனமழை நீடிக்கும் என்கிறார் ரமணன்!**

**சென்னை:** காற்றழுத்த தாழ்வு நிலை கன்னியாகுமரி கடல் பகுதியில் நீடிப்பதால், கடலோர மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை மைய இயக்குனர் ரமணன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து கன்னியாகுமரி கடல் பகுதியில் நீடிக்கிறது. இதன் காரணமாக, கடலோர மாவட்டங்கள், உள்மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழை பெய்யலாம். மேலும், வருகின்ற புதன்கிழமை முதல் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மட்டுமே மழையை எதிர்பார்க்க முடியும். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று காலை வரை, இலுப்பூரில் 9 செ.மீ. மழையும், புதுச்சேரியில் 7, ராமநாதபுரம், ஆர்.எஸ்.மங்கலத்தில் 6 செ.மீ. மழையும், திருவள்ளூரில் 5 செ.மீ. மழையும் பதிவாகி உள்ளது" என்றார்.